# கருணாநிதி, நெடுஞ்செழியன் தலைமையில் தனித்தனி மௌன ஊர்வலம்


Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★★

# ஈழநாடு

EELANADU

மலர் 11

தபால்பெட்டி எண்: 49 இதழ்: 7

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மாசி 6 ஜுலை: 29 திங்கட்கிழமை [17-2-69]



ஹோப் கப்பல்
கண்வைத்திய டாக்டர் போல்ட்வின்
அவர்களுடைய விரிவுரைகளில்
பங்குபற்றியவர்
D. சேனாதிராஜா
பல் கட்டுபவர்
கண் பரிசோதகர்
ஓமெயின் வீதி, யாழ்ப்பாணம்.


# தமிழ் நாட்டில் அண்ணா நினைவு தினம்

சென்னை, பெப். 16

தமிழ்நாடு முழுவதிலும் இன்று அண்ணா நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது. சென்னை நகரிலும் மற்றும் பல இடங்களிலும் மௌன ஊர்வலங்கள் நடைபெற்றன.

சென்னை நகரில் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி தலைமையில் ஒரு மௌன ஊர்வலமும் திரு. இரா. நெடுஞ்செழியன் தலைமையில் ஒரு மௌன ஊர்வலமும் நடந்தது.

அண்ணா மந்திரிசபையில் கல்வி அமைச்சராகவும் அண்ணா காலமானதும் இடைக்கால மந்திரிசபையின் தற்காலிக முதலமைச்சராகவும் பணியாற்றிய திரு. நெடுஞ்செழியன் காலையில் ராஜாஜி மண்டபத்திலிருந்து ஆரம்பமான முதலாவது மௌன ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கினார். சுமார் பத்தாயிரம் மக்கள் கலந்து கொண்ட இந்த



ஊர்வலம் மரீனா கடற்கரையில் அண்ணாவின் சமாதிக்குச் சென்று மலர் வளையங்களையும் மலர்களையும் வைத்து அஞ்சலிசெலுத்தியது,

இந்த ஊர்வலம் புறப்பட்ட பின்னர் முதலமைச்சர் திரு. கருணாநிதி தலைமையில் மற்றொரு மௌன ஊர்வலம் ராஜாஜி மண்டபத்திலிருந்து அண்ணா சமாதியை நோக்கிப் புறப்பட்டது. சுமார் முப்பதாயிரம் பேர் கலந்து கொண்ட இந்த ஊர்வலம் அண்ணா சமாதிக்குச் சென்று மலர் வைத்து அஞ்சலி செலுத்தியது. அண்ணா சமாதியில் அஞ்சலி செலுத்துகையில் இரண்டு ஊர்வலத்தில் வந்தவர்களும் ஒன்று சேர்ந்து கொண்டனர். நகரில் வேறு பல மௌன ஊர்வலங்களும் நடைபெற்றன. மக்கள் அண்ணா சமாதியிலும் மவுண்ட் ரோடில் அண்ணா சிலை முன்னும் மலர்வைத்து அஞ்சலி செய்தனர்.

## கதவுகள் திறந்தன

உடும்பராய், ஞாயிறு

உடும்பராய் கற்பகப் பிள்ளையார் கோவில் இன்று முதல் திறந்துவிடப்பட்டுள்ளது. ஆசார சீலராக செல்லும் எவரும் உள்ளே சென்று வழிபடலாம்.

# பொதுத் தேர்தலுக்கு அரசியல் கட்சிகள் தயார்

## புதிய ஒரு கட்சியும் உருவாகிறது

### ஜூன்மாதம் தேர்தல் நடைபெறலாம்

பம்பலப்பிட்டி, ஞாயிறு

சிங்கள-தமிழ் புதுவருடத்தையொட்டி ஆட்சி மன்றம் கலைக்கப்படுமென்றும் ஜூன் மாதத்துக்கு முன்னர் அடுத்த பொதுத் தேர்தல் நடைபெறுமென்றும் அரசியல் வட்டாரங்கள் நம்புகின்றன. இவ்வருட நடுப்பகுதியில் பொதுத்தேர்தல் நடைபெறுவது நிச்சயம் என்று அரசியல் கட்சிகள் எதிர்பார்த்து தேர்தலுக்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதில் கவனத்தைத் திருப்பியுள்ளன.

இப்போதுள்ள அரசியல் கட்சிகளுடன் புதிய ஒரு கட்சியும் உருவாகலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. புதிய கட்சியை உருவாக்குவதற்கான முயற்சி சென்ற சில மாதங்களாக நடைபெற்று வருவதாகவும் அநேகமாக சிங்களபுதுவரு...

நீதியரசர் திரு. ஹேமாபஸநாயகா தலைமைதாங்கக் கூடுமென்றும் அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

ஐக்கிய தேசியக்கட்சியின் பதினெட்டாவதுவருடாந்த மகாநாடு இம்மாதம் 23-ந் திகதி குளியாப்பிட்டியில்...

இவ்வருடம் ஏப்ரல்மாதத்தில் அகில இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியின் ஆண்டுமகாநாடு உடுவில் தொகுதியில் நடைபெறவிருக்கிறது.

அகிலஇலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் ஆண்டு மகாநாடு பற்றி இன்னமும் திகதி நிர்ணயிக்கப்படவில்லையாயினும் ... மே மாதம் அல்லது

## காயத்துடன் 6 பேர் வரை ஸ்தலத்தில் கிடந்தனர்

### மந்துவில் கொலைவழக்கில் இன்ஸ்பெக்டர் சாட்சியம்

சாவகச்சேரி, ஞாயிறு

சென்றவருடம் ஜுலை 9-ந் திகதி நான் சாவகச்சேரிப் பொலிஸ் இன்ஸ்பெக்டராக விருந்தேன். அன்றிரவு 11 மணிக்கு சார்ஜன்ட் சந்தியாப்பிள்ளை மந்துவில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் பற்றித் தெரிவித்தார். நான் அவருடனும் கான்ஸ்டபிள்களுடனும் ஜீப்பில் ஸ்தலத்துக்குச் சென்றேன். அங்கு அ...ண்டம வீட்டுப்படலையிலும் உள்வளவிலும் காயங்களுடன் நவரத்தினம் அருணசலம் உட்பட ஐந்து அல்லது ஆறுபேர் ... அவர்களை ... அனுப்பிவைத்தேன்.

ரேட் முன்னிலையில் மீண்டும் விசாரணை செய்யப்பட்ட மந்துவில் கொலைவழக்கில் சாட்சியமளித்த சாவகச்சேரிப் பொலிஸ்இன்ஸ்பெக்டர் திரு. பெர்னாண்டோ மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கில் சென்ற வருடம் ஜுலை 9ம் திகதி இரவு மந்துவில் வாசியான நவரத்தினம் என்பவரை சுட்டுக் கொலை செய்ததாகவும் மற்றும் 5 பேருக்கு காயம் விளைவித்து கொலை செய்யமுயன்றதாகவும் சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றஞ்சாட்டி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேல்விசாரணைஒத்தி...க்

## 'சங்கு' காலமானார்

சென்னை, பெப். 16

சுதந்திரப் போராட்ட வீரரும், பிரபல எழுத்தாளருமான திரு. சங்கு சுப்பிரமணியம் நேற்றுக் காலமானார்.

## குமரிமுனையில் 4 மீனவர் தஞ்சம்

கன்னியாகுமரி, பெப். 16

நான்கு மீனவர்கள் கன்னியாகுமரிக் கடலில் களைத்துச் சோர்ந்து பேசமுடியாத நிலையில் ஒரு படகில் தத்தளித்துக் கொண்டிருந்தபோது கன்னியாகுமரி மீனவர்கள் அவர்களைக் காப்பாற்றிக் கரை சேர்த்தனர்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர்கள் குணமடைந்து வருகின்றனர். தமிழ்மொழிபேசுபவர்கள் என்று கருதப்படும் இம்மீனவர்கள் இலங்கையர்களாக இருக்கலாமென நம்பப்படுகிறது.

## பாண்டிச்சேரி இடைதேர்தல் மார்ச் 9-ல் நடைபெறும்

### 20 தொகுதிகளிலும் 51 பேர் போட்டி

பாண்டிச்சேரி, பெப். 16

பாண்டிச்சேரி இடைத்தேர்தலில் பாண்டிச்சேரி பகுதியில் உள்ள 20 தொகுதிகளிலும் இறுதியாக 51 பேர் போட்டியிடுகிறார்கள். அவர்களில் பழைய முதல்மந்திரிகளான வெங்கடசுப்பா ரெட்டியார் (காங்) பரூக் மரைக்காயர் (தி.மு.க. இருவரும் முக்கியமானவர்கள்.

பாண்டிச்சேரியில் அடுத்த மாதம் 9-ம் தேதி இடைத்தேர்தல் நடக்க இருக்கிறது.

பாண்டிச்சேரியில் மொத்தம் 30 சட்டசபை தொகுதிகள் உள்ளன.

பாண்டிச்சேரியில் 20 தொகுதிகளும் காரைக்காலில் 7 தொகுதிகளும், மாகியில் 2 தொகுதிகளும் ஏனாமில் ஒரு தொகுதியும் உள்ளன.

பாண்டிச்சேரிப் பகுதியில் மட்டும் உள்ள மொத்த வாக்காளர் எண்ணிக்கை 1,06,127.

இதில் ஆண்கள் 81,101 பெண்கள் 79,026.

பாண்டிச்சேரி பழைய முதல் மந்திரிகளான வெங்கடசுப்பா ரெட்டியார் [காங்] நெட்டப்பாக்கம் தொகுதியிலும் பழைய முதல்மந்திரி மரைக்காயர் (தி.மு.க.) காலாப்பட்டு தொகுதியிலும் போட்டியிடுகிறார்கள்.

## பேராதனைப் பல்கலைக்கழக உப அத்தியட்சகர் மாஜி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியும் உருவாகலாமென வும் எதிர்பார்க்கப்படுகிறது. புதிய கட்சியை உருவாக்குவதற்கான முயற்சி சென்ற சில மாதங்களாக நடைபெற்று வருவதாகவும் அநேகமாக சிங்களபுதுவருடத் தினத்தன்று இக்கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெறுமென்றும் கூறப்படுகிறது. தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினால் இலங்கையின் சுதந்திரத்துக்கும் சிங்கள மக்களின் உரிமைகளுக்கும் ஏற்படக் கூடிய ஆபத்தைத் தடுப்பதும் சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும் நாட்டைப் பொருளாதாரத்தில் முன்னேற்றுவதும் புதிய கட்சியின் முக்கிய கொள்கைகளாக இருக்குமென்றும் இக்கட்சிக்கு முன்னாள் பிரதம கூடுமென்றும் அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

ஐக்கிய தேசியக்கட்சியின் பதினெட்டாவதுவருடாந்த மகாநாடு இம்மாதம் 23-ந் திகதி குளியாப்பிட்டியில் ஆரம்பமாகிறது. உணவு உற்பத்தி அதிகரிப்பு இயக்கம் சம்பந்தமாக அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளைப் பாராட்டும் ஒரு தீர்மானமும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் மற்றும் பிரச்னைகளையும் தீர்ப்பதற்கு உடனடியாக அரசாங்கம் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக்கோரும் ஒரு தீர்மானமும் மகாநாட்டுக்குவரவிருக்கின்றன. தேர்தலுக்கான ஒழுங்குகள் பற்றியும் மகாநாடு ஆராயுமெனஎதிர் பார்க்கப்படுகிறது.

அரசுக்கட்சியின் ஆண்டுமகாநாடு உடுவில் தொகுதியில் நடைபெறவிருக்கிறது.

அகிலஇலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் ஆண்டு மகாநாடு பற்றி இன்னமும் திகதி நிர்ணயிக்கப்படவில்லையாயினும் மே மாதம் அல்லது ஜூன்மாதத்தில் இணுவிலில் நடைபெறலாமென எதிர் பார்க்கப்படுகிறது.

எதிர்க்கட்சியினரும் தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்து முடித்துள்ளனர். பொதுத்தேர்தல் எப்போது வந்தாலும் அதற்குத்தயாராக எதிர்க்கட்சிக்கூட்டணி இருப்பதாக கூட்டணியைச் சேர்ந்த ஒரு பிரமுகர் தெரிவித்தார்.

தெல்லிப்பளை ஆஸ்பத்திரி

# திறந்துவைக்க முடியாத நிலை

நல்லூர், திங்கள்

சுமார் 7 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட தெல்லிப்பளை அரசினர் ஆஸ்பத்திரியை திறந்துவைக்க முடியாமல் சுகாதாரப்பகுதியினர் திண்டாடி வருவதாகத் தெரியவருகிறது.

ஆஸ்பத்திரி கட்டடவேலைகள் முடிவடைந்த போதிலும், தண்ணீர் விநியோக வேலைகள் இன்னும் பூர்த்தியாகவில்லை.

தண்ணீர் பெறுவதற்குக் கிணறு வெட்டவேண்டும் என்றும், கிணறு வெட்டுவதற்கு வெடி வைக்கவேண்டுமென்றும், வெடி வைத்தால் புதிய கட்டடங்கள் பாதிக்கப்படுமென்றும் சுகாதாரப் பகுதியினர். அச்சமடைந்திருப்பதாகவும், சுகாதாரப் பகுதியைச்சேர்ந்த உயர்தர அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அண்மையில் சுகாதார மந்திரி இந்த ஆஸ்பத்திரிக்கு விஜயம்செய்தபோது கூடிய சீக்கிரத்தில் ஆஸ்பத்திரியை திறக்க ஏற்பாடு செய்யும்படி உத்தரவிட்டிருந்தார்.

தண்ணீர் வசதியின்றி ஆஸ்பத்திரியை திறப்பதால் நோயாளர்கள் பாதிக்கப்படுவார்களென்று கூறப்படுகிறது.

சாபா பிரச்னையில் சண்டைவந்தால்

# மலேசியாவுக்கு சிங்கப்பூர் உதவும்

கோலாலம்பூர், பெப் 16

சாபா பிரச்னையில் பிலிப்பைன்சுக்கும் மலேஷியாவுக்கும் ராணுவ கைகலப்புஏற்படும் பட்சத்தில் சிங்கப்பூர் மலேஷியாவின் உதவிக்குவரசம்மதம்தெரிவித்திருப்பதாக மலேஷிய பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் கூறியிருக்கிறார்.

மலேஷியாவுக்கு ராணுவரீதியில் முன்னர் போல ஆதரவு அளிக்க பிரிட்டன் தயங்குவதாகவும் துங்கு தெரிவித்துள்ளார். பிலிப்பைன்சுடன் பிரிட்டனுக்கு ஏற்பட்டுள்ள நெருங்கிய தொடர்புகளை குறைத்துக் கொள்ள பிரிட்டன் விரும்பாததே இதற்கு காரணம் என்று துங்கு குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டனிடம் மலேஷியா வாங்கவிருந்த சாதாரண விமானங்களைக் கைவிடப்போவதாகவும்பிரான்ஸிடமிருந்து வேகமுள்ள உறுதியான சண்டை விமானங்களை மலேஷியா வாங்குமென்றும் அவர் மேலும்குறிப்பிட்டுள்ளார்.

## பொலிஸ்சுட்டதில் ஒருவர் பலி

ராவால்பிண்டி, பெப் 16

கிழக்குப் பாகிஸ்தானில் நேற்று குழப்பம் செய்த கும்லொன்றின் மீது பொலிசார் சுட்டபோது ஒருவர் பலியானார் பலர் காயமடைந்தார்கள்.

டாக்கா சதிக்குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருந்த இருவர் நேற்று சிறையிலிருந்து தப்பிப்போக முயன்றபோது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்கள். காயமடைந்த இருவரில் ஒருவர் இன்றுமரணமானார். மற்றவர் நன்கு குணமடைந்துவருகிறார்.

## இன்று

யாழ்ப்பாணம், திங்கள்

அறிஞர் அண்ணாவின் மறைவு குறித்து அனுதாபக்கூட்டம் இன்று மாலை கொடிகாமம் சந்தை மைதானத்தில் நடைபெறும்

இசைப்புலவர் சி. செல்லத்துரை தலைமையில்நடைபெறும் இக்கூட்டத்தில் சாவகச்சேரி எம். பி., வி. என். நாவரத்தினம் ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. நவரத்தினம், புலவா பார்வதிநாதசிவம் புலவர் தமிழ்மாறன், திரு. க. க. கணேசலிங்கம், புதுமைலோலன் மற்றும் பலர் பேசுவார்கள்.

## முயற்சி

அச்சுவேலி, ஞாயிறு


வலி.கிழக்கு பஸ்பிரயாணிகள் சங்கம் என்ற பெயரில் ஒருசங்கத்தை நிறுவ அச்சுவேலிப்பகுதிப் பிரமுகர்கள் பலர் முயற்சி மேற் கொண்டுள்ளனர்.

யிலும உள்வளவிலும் காயங்களுடன் நவரத்தினம் அருணாசலம் உட்பட ஐந்து அல்லதுஆறுபேர் கிடந்தார்கள். அவர்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தேன்.

சாவகச்சேரி மாஜிஸ்தி றும் 5 பேருக்கு காயம் [illegible]ளைவித்து கொலை செய்யமுயன்றதாகவும் சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றஞ் சாட்டி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேல்விசாரணைஒத்தி[illegible]க் கப்பட்டுள்ளது.

# காமராஜர் மந்திரி பதவி ஏற்கார்



புதுடில்லி. பெப். 16

நாகர்கோயில் எம். பி.யும் இந்திய காங்கிரஸின் முன்னாள் அக்ராசனருமான திரு. குமாரசாமி காமராஜர் மத்திய மந்திரி சபையில் மந்திரி பதவி ஏற்றுக்கொள்ள மாட்டாரென்று நம்பிக்கையான வட்டாரங்கள் இன்று தெரிவித்தன.

மந்திரி பதவியொன்றை வழங்க முன்வந்த பிரதமர் திருமதி இந்திராவுக்குப் பதில் சொல்வதற்குச் சிறிது அவகாசம் கோரியபோதும் மந்திரியாகப் பதவி வகிப்பதைவிட மந்திரிசபைக்கு வெளியேயிருந்து காங்கிரஸுக்கும், மத்திய அரசாங்கத்துக்கும் பெரும் பணியாற்றமுடியுமென திரு. காமராஜர் கருதுவதாகவும் இதைத் தம்முடைய நெருங்கிய நண்பர்கள் சிலருக்கு அவர் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

# கைதாகிய 7 பேருக்கு 5000 ரூபாய் அபராதம்

நல்லூர், திங்கள்

நடுக்கடலில் ஆறுமூடை சேலைகளுடன் நேற்றுமுன் தினம் கைப்பற்றப்பட்ட சுமார் 50,000 ரூபா பெறுமதியான வள்ளம் சுங்க பகுதியினரால் பறிமுதல் செய்யப்பட்டது. இவ் வள்ளத்தில் கைதுசெய்யப் பட்ட 7 நபர்களுக்கு 5000 ரூபா அபராதம் விதிக்கப் பட்டது.

சுங்கப்பகுதி உதவி கலக்டர் திரு. செனிவரத்ன விசாரணைசெய்து, வள்ளத்தை பறிமுதல்செய்யும் படியும், 5000 ரூபா அபராதம் செலுத்தும்படியும் உத்தரவிட்டார்.

வல்வெட்டித்துறை நடுக்கடலில் வள்ளத்தை கண்டு சுங்கப்பகுதியினரும், கடற்படையினரும், சுமார் 10 மைல் தூரம் வள்ளத்தை துரத்திச்சென்றனர். ஆகாயத்தில் 10 தடவை சுட்ட போதும் வள்ளம் நிறுத்தப் படாததால் வள்ளத்தை நோக்கி சுட்டனர்.

வள்ளத்தில் கொண்டு செல்லப்பட்ட பல மூடைகள் கடலில் வீசப்பட்டதாகவும், கைப்பற்றப்பட்ட 6 மூடைகளில், மணிபுரி, காஞ்சிபுரம், ஔவையார் சேலைகளும் வேட்டிசால்வைகளும் இருந்ததாக சுங்கப் பகுதி அதிகாரி ஒருவர் கூறினார்.

## தீவுப்பகுதி படகுசேவை அபிவிருத்தியடையும்

யாழ்ப்பாணம், திங்கள்

தீவுப் பகுதிக்கான படகுச் சேவையை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக அறியப்படுகின்றது.

தீவுப்பகுதிகளுக்கான படகுச் சேவைகள் குறித்து பிரயாணிகளும், பிரமுகர்களும், ஆட்சிமன்ற உறுப்பினர்களும் தெரிவித்து வந்த புகார்கள் குறித்து அரசாங்கம் இப்பொழுது ஆராய்ந்து வருகின்றது. தீவுப்பகுதி பிரயாணத்துக்கு உபயோகிக்கப் பட்டுவரும் படகுகளுக்கு பதில் புதிய படகுகளைப் பாவனைக்கு விடவும், அதிகாரிகளை கொண்டு அடிக்கடி சோதனைகள் நடத்தவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க விருப்பதாகத் தெரிகின்றது.

பேராதனைப் பல்கலைக்கழக

# உப அத்தியட்சகர் மாஜி நீதியரசர் பேர்னுண்டோ

கொழும்பு, ஞாயிறு

ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. டி. எஸ். பெர்னுன் டோவைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புதிய உப-அத்யட்சகராக நியமிப்பதற்கான முயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாகவும், அநேகமாக திரு. பெர்னுன்டோ உப-அத்யட்சகராகப் பதவியேற்பது நிச்சயமென்றும் அரசியல் வட்டாரங்களிலும் பல்கலைக்கழக வட்டாரங்களிலும் நம்பப்படுகிறது

கல்வித்தகைமையும் சட்டத்துறையில் நல்ல ஆற்றலுமுள்ள திரு. பெர்னுன்டோ எந்த நிலைமையையும் சமாளிக்கக்கூடிய உறுதிமிக்கவரென்றும் பாரபட்சமற்ற முறையில் நடந்துகொள்ளக் கூடியவரென்றும் அத்துடன் அரசாங்கத்தினதும் எதிர்க் கட்சியினதும் ஆதரவையும் அனுதாபத்தையும் பெற்றவரென்றும் கூறப்படுகிறது. உப-அத்யட்சகர் பதவியை ஏற்கும்படி அவரைப் பலரும் தூண்டிவருவதாகவும் அவரும் இதற்குச் சம்மதித்திருப்பதாகவும், இதனால் அவரது பெயரை உப-அத்யட்சகர் பதவிக்குத் தேசீய உயர் கல்விச் சபை, கல்வி அமைச்சருக்குச் சிபார்சு செய்யுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## 'தீண்டாமை ஒழிவதற்கு அன்புவழிதான் சிறந்தது'

யாழ்ப்பாணம், திங்கள்

'சமூக ஏற்றத் தாழ்வை ஒழிப்பதற்கு வழிகள் பல உண்டு. பல வழிகள் இருந்த போதிலும், சிறந்தவழியைத்தான் பின்பற்றவேண்டும். அன்புமார்க்கம், சட்ட நடவடிக்கை, பலாத்காரம் ஆகிய வழிகளால், தீண்டாமைப் பிரச்னையைத் தீர்க்க முயற்சிகள் எடுக்கப் பட்டுவருகின்றன. இவற்றுள் அன்பு வழி ஒன்றின் மூலம் தான் இப்பிரச்னைக்கு சுமுகமான முடிவு காணலாம்.'

மந்துவிலில் நேற்றுமுன் தினம் நடந்த தியாகி இரத்தினம் நினைவு விழாவில் கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளை பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

ஆசிரியர் கே. நடராசா தலைமையில் விழா நடைபெற்றது.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசும்போது தீண்டாமை பிரச்னை தீர்க்கப்படாமலிருந்துவருவது கவலையளிப்பதாகவும், இப்பிரச்னைக்குத் தீர்வுகாணவேண்டிய வழிகளைப் பின்பற்றவேண்டுமென்றும் கூறினார்.

முன்னாள் செனட்டர் ஜி. நல்லையா கூறியதாவது: தீண்டாமை ஒழிப்பு பிரச்னையில், அரசாங்கம் மாற்றுந்தாய் மனப்பான்மை காட்டிவருகிறது, அரசாங்கத்தின் ஆதரவு இல்லாத போது இப்பிரச்னையில் பலாத்கார வழிகளைப் பின்பற்றி வெற்றி காணவே முடியாது. அறவழியில்தான் இதற்குநாம் தீர்வுகாண வேண்டும்.

திரு. எம். சி. சுப்பிரமணியமும் பேசினார்.

# அண்ணுவுக்கு அஞ்சலி கூட்டம் ரத்து ஏன்?

யாழ்ப்பாணம், திங்கள்

அமரர் அண்ணுவுக்கு அஞ்சலிசெலுத்துமுகமாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் ஆதரவில் நேற்று மாலை யாழ்ப்பாண முற்றவெளி மைதானத்தில் நடைபெறவிருந்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

இக்கூட்டத்துக்கு தலைமை வகிக்கவிருந்த காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் உடல்நலக் குறைவு காரணமாகத்தான் இந்த அனுதாபக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டதாகக் காங்கிரஸ் காரியதரிசி தெரிவித்தார்.

ஆனால் இக்கூட்டத்தில் பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தவர்கள் சம்பந்தமாக தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணியினருக்கிடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டதாகவும் இதுசம்பந்தமாக வாலிப முன்னணிக் காரியதரிசிகள் ராஜினமாச் செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்


## விற்பனைக்கும் வாடகைக்கும்

சுழிபுரம்வடிமாளிகை வியாபாரத்துக்குரிய சகல விதமான தளபாடங்களுடனும், மொத்த வியாபாரம் செய்பவர்களுக்கு வாடகைக்கு உண்டு. அத்துடன் கடைக்கு தெற்குப்பக்கமாக மூன்று (3) பரப்புக் காணி வீட்டுப் பாவனைக்கோ, கடைப்பாவனைக்கோ ஏற்றதாக விற்பனைக்குண்டு. விரும்புவோர் நேரில் தொடர்பு கொள்ளவும். ச. த. ஐயாக்குட்டி, சுழிபுரம்வடி மாளிகை, ஆனைக்கோட்டை. 530

## விற்பனைக்கு

காணி:

உடுவிலில், மருதனுமடம் சந்திக்கும் உடுவில் மகளிர் பாடசாலைக்கும் இடையில் இரு வீதிகளின் முகப்பில் கிணற்றுடன் கூடிய ஒன்று அல்லது இரண்டு கட்டிடம் கட்டுவதற்கேற்ற 7 1/3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. சுண்டிக்குளி, றக்கா ஒழுங்கை 32-ம்இலக்க இல்லத்திலுள்ள திரு. சபாரத்தினத்துடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி 7164. 669

சமண்டலை, வேப்பம் பலகைகள் விற்பனைக்குண்டு. வேண்டிய அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம். விபரங்களுக்கு, சு. வையாபுரி, மயிலிட்டிகரை, மயிலிட்டி. 528

## தேவை

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு மனேச்சர்தேவை. ஆரம்ப சம்பளம் ரூபா 100/= பிணை உரொக்கம் 1000 = கூட்டுறவுப்பயிற்சி பெற்றவர்களாகஇருந்தால்விரும்பத்தக்கது. 25-2-69 க்குமுன் தலைவருக்கு விண்ணப்பிக்கவும். W. G. அன்னப்பா, காரியதரிசி. 529




## புதிய ஜே. பி.

யாழ்ப்பாணம், சனி

சுதுமலை வடக்கைச் சேர்ந்த திரு. வேலுப்பிள்ளை தியாகராஜா சமாதான நீதவானக யாழ்ப்பாண நீதவான் ஜனுப் முகமது ஜமீல் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

போஸ்ட்மாஸ்டராக 37 வருடம் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. தியாகராஜா சமூக சமய சேவைகளில் பெரும் பங்கெடுத்து உழைத்துள்ளார். இவர் மானிப்பாய் பஸ் பிரயாணிகள்சங்கம், மானிப்பாய் சனசமூக நிலையம் ஆகியவற்றின் தலைவராகவும், மானிப்பாய் இந்துமன்றத்தின் காரியதரிசியாகவும், யாழ். மாவட்ட ஐ. நா. ஸ்தாபனக் கிளையின் பொருளாளராகவும், இலங்கை புற்றுநோய் சபையின் யாழ். கிளை அங்கத்தவராகவும் கடமையாற்றினர்.

## புதிய ஜே. பி

யாழ்ப்பாணம், சனி

இணுவிலைச் சேர்ந்த திரு. கதிரித்தம்பி செல்வத்துரை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி ஜனுப் ஐ. எம். இஸ்மெயில் முன்னிலையில் புதிய சமாதான நீதிபதியாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இணுவில் பேராயிரமுடையார் வழித்தோன்றலாகிய திரு. செல்லத்துரை மல்லாகம், கல்கிசை, கொழும்பு, யாழ்ப்பாணம் முதலிய நீதிமன்றங்களில் பிரதம லிகிதராகவும் சக்கிடுத்தாராகவும் முதலியாராகவும் சேவை புரிந்து ஓய்வு பெற்றவர் தற்பொழுது நீதிமன்ற ஏல விற்பனவாளரும் விலைமதிப்பாளராகவும் கடமைபுரிகிருர். இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார்.

## இன்றைய பலன்

திங்கட்கிழமை

(17-2-69)

மாசி மாதம், 6 உ

திதி- பிரதமை இரவு 9-33 மேல் துதியை.

நட்சத்திரம்- சதயம் இரவு 2-02 மேல் பூரட்டாதி.

ராகுகாலம் - 8-03 9-33.

சுபநேரம்- 12-33 2-03.

இன்று பிறந்தவர்களுக்கு- தனியார்துறையில் தன்தொழில் புரிவோர்க்கு தனச் சிறப்பும் வணிகர்களுக்கு வரவில் திருப்தியும், வைத்தியத் தொழில் வருவாயில் மந்தநிலை. கவனம்செலுத்தின் கனதனமுண்டு. காதலர் வாழ்வில் கசப்பு மனப்பான்மை தோன்றும் ஆண்டாகும்.

மேஷம்- நடுநிலைக் கொள்கை நல்ல முடிவு.
ரிஷபம்- வாகனசுகம், வரவிலும் நலம்.
மிதுனம்- இதயபூரிப்பு இன்பத்தின் சாயல்.
கடகம்- அன்னியர் பகை, அகாலபோசனம்.
சிம்மம்- பாக்கிய விருத்தி, பாசஉணர்ச்சி.
கன்னி- கிட்டிவரும் பகை, எட்டிநில்.
துலாம்- பிதாவழிச் சுகம், பெரியோர்மதிப்பு.
விருச்சிகம்- செய்தொழில்விருத்தி, திறமை வேண்டும்.
தனுசு- பொன்பொருள் உண்டு பொறுமைவேண்டும்.
மகரம்- செய்தொழில் நஷ்டம், சிந்தனைக் கிலேசம்.
கும்பம்- மக்கள் பிணி மனப்போராட்டம்.
மீனம்- கல்வி நலன் கவர்ச்சியும்உண்டு.

சோதிடக்கலாநிதி

திருமலை வேலுப்பிள்ளை

# பேடன் பவல்ஞாபகார்த்த பேச்சுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

சாரணியத்தின் தந்தையான பேடன்பவல் ஞாபக விழாவை முன்னிட்டு யாழ். மத்தியகல்லூரியில்மாவட்ட சாரணர் சங்கத்தினரால் நடாத்தப்பெற்ற பேச்சுப் போட்டிகளின் முடிவு வருமாறு:

**ஒநாய்க் குருளையர்:**

இ யோகீஸ்வரன் (யாழ். இந்துக்கல்லூரி), பி. இரஞ்சித் (யாழ்ப்பாணக்கல்லூரி), வின்சன் கோமகன் (ஹாட்லிக் கல்லூரி).

**கனிஷ்ட சாரணர்**

பி. இரகுபதி (யாழ். இந்துக்கல்லூரி), ஆர். நரேந்திரன் (ஹாட்லிக் கல்லூரி), கே. ஸ்ரீஸ்கந்தராஜா (பரமேஸ்வராக் கல்லூரி).

**சிரேஷ்ட சாரணர்**

விஜயபாலன் (மகாஜனுக் கல்லூரி), என். சிவகுமார் (ஹாட்லிக் கல்லூரி, ஏ. எஸ். நேரு (சென். ஹென்றீஸ் கல்லூரி).

**சாரணச் சிறுமிகள்**

தமிழரசிவேந்தனுர் (யாழ். இந்துமகளிர்கல்லூரி), சாந்தி குமாரி இராஜதுரை (யாழ்ப்பாணக் கல்லூரி), அனுசூயா தியாகராஜா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

(ந. நி.)

# பொலிஸார் முன்னிலையில் அவதூறுசெய்தாராம்

குடும்பசிட்டி, ஞாயிறு

கிராமசேவையாளரை பொலிஸ் கான்ஸ்டபிள்கள் முன்னிலையில் அவதூருன வார்த்தைகளால் பேசி அவமதித்ததாக பெண் ஒருவருக்கு எதிராகச் சுன்னுகம் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்குவிசாரணையின் பின் மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கத்தால் மேல் விசாரணைக்கு 18-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அளவெட்டியைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரிஸ்பென்சர் என்றபெண்மணிசென்ற வருடம் பங்குனிமாதம்17ம் திகதி கிராம சேவையாளர் எஸ். சச்சிதானந்தத்தை அவதூருன வார்த்தைகள் பிரயோகித்து ஏசியதாக இவ்வழக்கு தொடரப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணையின் போது கிராம சேவையாளர் எஸ் சச்சிதானந்தம் தனது சாட்சியத்தில் கூறியதாவது: தற்போது நான் இணுவிலில் கடமையாற்றுகின்றேன். சம்பவதினம் தர்மலிங்கம் என்பவர் செய்திருந்த முறையீட்டையிட்டு விசாரணை நடாத்த எதிரியின் வீட்டுக்கு சென்றிருந்தேன். நான் சென்றபோது வீட்டு வளவுக்குள்ளே மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்களுடன் எதிரி நிற்கக் காணப்பட்டார். அந்நேரம் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருடன் எதிரி பேசியவாறு நின்ருர். நான் சென்றதும் பொலிஸ் கான்ஸ்டபிள் கூரே என்பவர் நான் ஏன் அங்கு வந்ததாக என்னிடம் விசாரித்தார். நான் காரணம் கூறியதும் எ[illegible] என்னை நோக்கி சிங்க[illegible], ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் அவதூருகப் பேசினர். உடனே நான் எனது குறிப்புப்புத்தகத்தில் சம்பவம் பற்றி பதிவுசெய்[illegible]துடன் பொலிஸில் பு[illegible]

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**திங்கள் 17 - 2 - 69**

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 கதம்பம், 1-00 தேர்ந்தஇசை.

344 மீ. அன் 19 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துகள், 5-30 வளரும்பயிர்.

இரவு 6-15 சங்கீத பாராயணம் - மணிபாகவதர், 6-30 விளையாட்டு தொகுப்பு வர்ணனை, 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 குறுக்கெழுத்து - தயாரிப்பு வி. ஏ. ஜி. 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 செய்திச் சுருள், 9-45 நாதஸ்வரம் - எம். எஸ். சண்முகநாதன்.

# அரிசி கிடைக்கும்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

இளவாலை பலநோக்குக் கூட்டுறவு சங்க தீ விபத்து காரணமாக இவ்வார இலவச அரிசிகிடைக்காதென மக்கள் அச்சம் கொண்டிருந்த போதிலும், கூட்டுறவு சங்க நிர்வாகிகளின் முயற்சியால் அரிசி வழங்கப்படவிருக்கிறது.

ஆயிரத்துக்கு மதிகமான கூப்பன்களைக் கொண்ட இச் சங்கத்தில் ஏற்பட்ட தீசேதத்தினுல் கூப்பன்களில் வெட்டப்பட்ட 'பி' துண்டுகள் முற்ருக எரிந்து சாம்பராயின. இளவாலை சென்ஆன்ஸ் நெசவு நிலையத்துக்கருகில் உள்ள கட்டிடம்ஒன்றில்தற்காலிகமாக அரிசி விநியோகம் நடைபெறவிருக்கிறது.

# அச்சுவேலி வீடமைப்பு திட்டத்தில் மேலும் வீடுகள்

அச்சுவேலி, ஞாயிறு

அச்சுவேலி குடியேற்ற வீடமைப்புத் திட்டத்தில் மேலும் வீடுகள் புதிதாகக் கட்டுவதற்கான ஏற்பாடு யாவும் குடியேற்ற வீடமைப்புத் திட்டப்பகுதியினரால் செய்யப்பட்டு வருகின்றது.

புதிதாகக் கட்டப்படும் இவ்வீடுகள் யாவும்பின்தங்கியமக்களுக்கே கொடுக்கப்படவிருக்கின்றது.

இக்கிராமததில் இருக்கக் குடிநிலம் அற்றவர்களாகஇருக்கும் ஹரிஜனர்களல்லாதோரும் புதிதாகக் கட்டப்படும் வீடுகளில் தங்களுக்கும் ஒருபகுதியை ஒதுக்கித்தரவேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரவிருப்பதாகத் தெரிய வருகிறது.

## சிரமதானம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

இளவாலை சென் ஜேம்ஸ் ஆலயத்திற்கான மணிக் கோபுரம் ஒன்று அமைப்பதற்கு அதன்அத்திபாரத்தை மேற்படி ஆலயத்தைச் சேர்ந்த இளைஞர் வெட்டி முடித்தனர். சிரமதான மூலம் இப்பணி மேற்கொள்ளப்பட்டது.


5-வது வாரம்!

ராஜா

(யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

10-30, 2-30, 6-30, 9-45

எம். ஜி. ஆர்-ஜெயலலிதா மற்றும் பலர் நடித்த

ஒளி விளக்கு

(ஈஸ்ட்மென் கலர்)

(எஸ். ரி. ஆர். வெளியீடு)

மானிப்பாய்

வெஸ்லி சினிமா

தினசரி 6-30, 9-30 மணி

பிரிபோயா. போயா 2-30 மணி

சிவாஜி - சாவித்திரி நடித்த

காத்தவராயன்

ராணி

(யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்

ஜெயசங்கர் விஜயநிர்மலா நடித்த

லகிரி எக்ஸ்பிரஸ்

இணுவில்

ஸ்ரீ காலிங்கன்

தினசரி 6-30, 9-30

பிரிபோயா, போயா 2-30

ஜெமினி - காஞ்சன நடித்த

வீர அபிமன்யு

எமது திரையில் சிலோன் தியேட்டர்ஸாரின் முதல் திரைவிருந்து.

வின்ஸர்

(யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

எம். ஜி. ஆர் - ஜெயலலிதா நடித்த

குடியிருந்த கோயில்


## மரண அறிவித்தல்

சுழிபுரம் வைத்தியர் நாகமுத்து

முத்துப்பிள்ளையின் அருமைக் கணவரும், திருமதிகள் இலட்சுமி ஆறுமுகம், நாகம்மா நன்னித்தம்பி, பண்டிதை பாக்கியம் பொன்னுத்துரை ஆகியோரின் தந்தையாரும் ஆகிய வைத்தியர் நா. நாகமுத்து அவர்கள் காலமானுர். அன்னுரின் தகனக்கிரியைகள் இன்று (17-2-69) நண்பகலில் திருவடிநிலை மயானத்தில் நடைபெறும். 791


வெலிங்டன் — யாழ்நகரில்

தினசரி 2-30, 6-30, 9-30 மணிக்கு

★மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.

★நடிகையர் திலகம் சாவித்திரி

★நம்பியார் ★நாகேஷ் ★ராகினி

நடித்த

கௌரி பிக்சர்ஸ் பரிசு

மு. கருணநிதியின் விமர்சனத்துடன்

S. S. வாசன் அவர்களால்

ஈஸ்மன்கலரில்படமாக்கப்பட்டு சென்னையில் நடைபெற்ற

இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சிமகாநாட்டு கோலாகல காட்சியையும்



மற்றும்

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணு ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்றுவதையும் பார்க்கலாம்!

தமிழ்நாடுசென்று விழாவைப் பார்க்காதவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

ஒவ்வொரு தமிழனும் அவசியம் பார்க்கவேண்டிய படம்.

கிங்ஸ்லி பிளாஸா மற்றும் சினிமாஸ் திரைகளில்




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# எல்லா வழிகளிலும் சக்தி

ஒவ்வொரு யூ ஆசா பற்றரியும் நீடித்த பாவிப்புக்குரிய சக்தியை உள்ளடக்கியுள்ளது. உலகப் புகழ்பெற்ற நவீன தொழில் நுட்ப வல்லுநர்களின் நிபுணத்துவத்தைப் பயன் படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட யூ ஆசா பற்றரி எல்லாவித பற்றரி வகைகளிலும் முன்னுக்குவைத்து எண்ணத் தக்கநும் தரத்தில் உத்தரவாதமுள்ளதுமாகும்.

18 மாத உத்தரவாதமுள்ளது. எந்த ரக பழைய பற்றரிகளுக்கும் ருபா 15/- திருப்பிக் கொடுக்கப்படும்.

வாங்குவதற்கு சிறந்தது

## யூ ஆசா




ஏக விநியோகஸ்தர்கள்:

ஈ. பி. கிறிஸி அன்ட்கோ., லிமிட்டெட்—கொழும்பு.

செனித்

என்னை நோக்கி சிங்களம், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் அவதூறுகப் பேசினர். உடனே நான் எனது குறிப்புப்புத்தகத்தில் சம்பவம் பற்றி பதிவுசெய்த துடன் பொலிஸில் பு[illegible] செய்தேன்.''

சாட்சி எதிரி தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். எதிரி தரப்பில் சாட்சிகள் அழைக்கப்படப் போவதாக தெரிவிக்கப் பட்டதனல் மேல்விசாரணை ஒத்திவைக் கப்பட்டது.

எதிரிசார்பில் அட்வகேட் ரகுபதி வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினத்தின் உதவியுடன் ஆஜரானர். பொலிஸ் தரப்பில் வழக்கறிஞர் எஸ். நடராசாவழக்கை நடாத்தினர்.

## ஊரங்குணை கொலைவழக்கு

### தீர்ப்பு 18-ந் திகதி

குடும்பசிட்டி, ஞாயிறு ஊரங்குணைகொலைவழக்கு விசாரணை பொலிஸ்தரப்பில் முடிவடைந்ததையடுத்து எதிரிகளை தொடர்ந்து றிமாண்டில் வைக்க உத்தரவிட்டு தீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 18-ம் திகதிக்கு மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் ஒத்தி வைத்தார்.

வெள்ளிக்கிழமை தொடர்ந்து இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சார்ஜண்ட் கே. சின்னத்தம்பி கான்ஸ்டபிள்கள் எஸ். ரவீந்திரராஜா, ஆரியரத்தின ஆகியோர் சாட்சியமளித்தனர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்தார்.

சென்றவருடம் டிசம்பர் மாதம் 22-ம் திகதி ஊரங்குணை வாசியான தம்பு நல்லையா என்பவரைக் கொலை செய்ததாக இவ்வழக்குசுன்ஞகம் பொலிசாரால் எஸ். கலைகலிங்கம், எஸ். சுப்பையா, எஸ். பொன்னம்பலம் ஆகிய மூவருக்கும் எதிராக தொடரப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன் புறக்டர் சிவசிறீதரனின் அநுசரணையுடன் ஆஜரானர். பொலிஸ் தரப்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் வழக்கை நடாத்தினர்.

மூன்ருவது எதிரி பிணையில் விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தினசரி 4 காட்சிகள்

எம். ஜி. ஆர் - ஜெயலலிதா நடித்த

## குடியிருந்த கோயில்

**MANOHARA**
**JAFFNA**
Daily at 4-45,
7-00, & 9-45 p. m.
Pre Poya-Poya 10-30 a. m.
Raquel Welch
in
ONE MILLION
YEARS B. C.
(Color)

தமிழ்நாடுசென்று விழாவைப் பார்க்காதவர்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்!
ஒவ்வொரு தமிழனும் அவசியம்
பார்க்கவேண்டிய படம்.

கிங்ஸ்லி பிளாஸா
மற்றும் சினிமாஸ் திரைகளில்

## சிவாஜி—கே. ஆர். விஜயா

முத்துராமன் - நாகேஷ்—எல். விஜயலக்ஷ்மி
நடித்த

# ஊட்டிவரைஉறவு

(ஈஸ்ட்மன் கலர்)



பின்வரும் பொருள்கள் நிதானவிலைக்கு விற்பனை செய்வதற்கு இருக்கின்றன.

தண்ணீர் பம்ப் கை வண்டிகள், நிப்பிள்கள், கப்ளிங்கள், பொருள்கள்சுமக்கும் ஒருசில்லு வண்டி, கைவண்டி, பிளாஸ்டிக் இரும்புக் கதிரைகள், கோப்பைகள் காய்கறிகள் புத்தகங்கள் வைக்கக்கூடிய பலரக ருக்கைகள், மடிக்கக்கூடிய ஸ்டூல்கள், கதிரைகள், வீட்டுப்பாவிப்புக்குத் தேவையான பலபொருள்களும் விற்பனைக்குண்டு.

மின்சாரம், மோட்டார் மெக்கானிசம் ஜெனரல் டெக்னீஜியன்ஸ் வகுப்புகளும் இங்கு நடத்தப்படுகின்றன.

# லோங்ஸ் இன்ஸ்டிடியூட் ஓவ் டெக்னோ என்ஜினியரிங்

பாங்ஷோல் வீதி, :-: யாழ்ப்பாணம்.

போன்: 248. 1191

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொடீஷியாவில்

# ஆபிரிக்கர்களைத் தனியாக பிரிக்கும் அரசியல் திட்டம்

## ஸ்மித் ஆட்சி வெளியிட்டுள்ளது

ஸாலிஸ்பரி, பெப்ரவரி 16

**ரொடீஷியாவிலுள்ள ஆபிரிக்க இனத்தவர் அனைவரையும் ஒரே பட்டியலில் சேர்த்து அவர்களுக்கு மிகக் குறைந்த பிரதிநிதித்துவம் கொடுக்கும் ஓர் அரசியல் திட்டத்தை ரொடீஷிய சட்டவிரோத ஆட்சியாளர் திரு. அயன் ஸ்மித் அறிவித்துள்ளார்.**

ஆபிரிக்கர்கள் ஒரு பட்டியலிலும், வெள்ளையர், ஆசியாக்காரர், இந்திய இனத்தவர் மற்றும் கலப்பு இனத்தவர்கள் இன்னொரு பட்டியலிலும் இடம்பெறுவர்.

இந்த அரசியல் திட்டத்தின்படி ரொடீஷியாவில் பெரும்பான்மை மக்களான ஆபிரிக்கர்கள் ஒரு பட்டியலின்கீழ்வருவர் இவர்கள்தங்களுக்கென சட்டசபையில் 16 பிரதிநிதிகளைக் கொண்டிருப்பார்கள். இந்தப் பிரதிநிதிகளில் 8 பேர் நியமன மூலமும் 8 பேர் தேர்தல் மூலமும் தெரிவுசெய்யப்படுவார்கள்.

வெள்ளையர்கள், ஆசியாக்காரர், இந்தியர்களும் மற்றக் கலப்பு இனத்தவர்களுக்குமென 50 பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

ஆபிரிக்கர்களின் வருமான வரிகள் அதிகரிக்கும் விகிதத்தைப் பொறுத்து அவர்களின் பிரதிநிதித்துவமும் கட்டம் கட்டமாக அதிகரிக்கப்படும். இந்த அரசியல் திட்டத்தின் மீது வரும் மே மாதத்தில் ரொடீஷியாவில் வாக்கெடுப்பு ஒன்று நடைபெறும் என்றும் திரு. ஸ்மித் அறிவித்துள்ளார்.

---

மேற்கு பேர்லின் அதிபர் தேர்தல்

## 'பிரிட்டன் சகல பாதுகாப்பும் அளிக்கும்'

### வில்சன் உறுதி

லண்டன், பெப். 16

மேற்குபேர்லினின்அதிபர் தேர்தலை சுதந்திரமாக நடாத்துவதற்கு பிரிட்டன் சகல பாதுகாப்புகளையும் அளிக்குமென்று பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சன் மேற்கு ஜெர்மனியிலிருந்து இங்கு திரும்பியதும் தெரிவித்தார்.

மேற்கு ஜெர்மனியில் கீஸிங்கரிடம் கடுமையான ஆட்சேபக் குறிப்பொன்றை கொடுத்திருந்தது.

திரு. ஹரோல்ட் வில்சன் மேற்கு ஜெர்மனிக்குச் சென்று திரும்பியுள்ளது தெரிந்ததே.

மேற்கு பேர்லின் அதிபர் தேர்தல் நடக்க இருப்பதைத் தொடர்ந்து கிழக்கு ஜெர்மன் தமது வீதிகள்

---

## ரயிலுக்கடியில் 2 வயது குழந்தை

திருச்சி, பெப். 16

ரயில்பாதையில் விளையாடிக் கொண்டிருந்த 2 வயது குழந்தையைத் திடீரென வந்த ரயில் அடித்துத் தள்ளிவிட்டது. குழந்தையின் உடல் சின்னபின்னமாகியிருக்கும் என்று பார்த்துக் கொண்டிருந்தவர்கள் நினைத்தார்கள். என்ஜினும் இரண்டு போகிகளும் குழந்தையைக் கடந்தபின் ரயில்நின்றது. உடனே ரயிலுக்கடியிலிருந்து குழந்தை வெளியில் வந்து தன் வீட்டை நோக்கி ஓடிவிட்டது. அதன் தலையில் மட்டும் சிராய்ப்புக்காயங்கள் ஏற்பட்டிருந்தன. கடந்த வெள்ளிக்கிழமை திருச்சியில் இந்தச்சம்பவம்நடைபெற்றது.

---

## தென் கன்னடத்தில் 10 ஆயிரம பேருக்கு புனர்வாழ்வு

பெங்களூர், பெப். 16

தெற்கு கன்னட மாவட்டத்தில் சுல்லையா தாலுகாவில் சுமார் 10 ஆயிரம் இலங்கை தமிழ் அகதிகள் குடியமர்த்தப் படுவார்கள் என்று மைசூர் உணவு அமைச்சர் அறிவித்துள்ளார்.

---

## ஜப்பான் சென்றார்

உடுப்பிட்டி, ஞாயிறு

கரவெட்டியைச் சேர்ந்த திரு. எஸ். சிவசிதம்பரம்

---

# "அயூப் பதவியை விட்டு இறங்கு"

ராவல்பிண்டி, பெப். 16

'அயூப் பதவியைவிட்டு இறங்கு' என்று கவர்னர் மாளிகைக்குமுன் அணிவகுத்து நின்று ஆர்ப்பாட்டம் நடாத்தினார்கள் பாகிஸ்தான் பெண்கள்.

நேற்றுமுன்தினம் பாகிஸ்தானின் முக்கிய நகர்களிலெல்லாம் பலத்தமோதல் இடம்பெற்றது. எட்டு எதிர்க்கட்சிகள்கூடிநாடெங்கிலும் நேற்று நடாத்திய பொதுவேலை நிறுத்தத்தின் எதிரொலியாக 5 பேர் உயிரிழந்தனர்.

கராச்சி, லாகூர் மற்றும் சில இடங்களிலும் ராணுவம் வீதிகளெல்லாவற்றையும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது.

கராச்சியில் பொலிஸார் சுட்டதில் 3 பேர் கொல்லப்பட்டனர். டாக்காவில் இருவர் மாண்டனர்.

நேற்று முன்தினம் கராச்சியில் 3 லட்சத்துக்கு மேற்பட்டோர் கூடி நின்று ஆர்ப்பாட்டம் செய்தபோது, பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். கூட்டத்தைக்கலைக்க கண்ணீர் பிரயோகத்தையும் நடாத்தினர்.

வரும் திங்கட்கிழமையிலிருந்து பாகிஸ்தானில் அமுலிருந்து வந்த அவசரகாலச் சட்டம் ரத்துச்செய்யப்படுகிறது. திங்கட்கிழமை எதிர்க்கட்சித் தலைவர்களை சந்தித்து பாக். அதிபர் திரு. அயூப்கான் பேசவுள்ளார். இந்த சந்திப்பில் காவலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள முன்னாள் வெளியுறவுமந்திரி திரு. பூட்டோவும் கலந்து கொள்வார்.

---

பீகாரில்

# ஒரு குடும்பமே தேர்தலில் வெற்றி

ஹாஜாரிபாக், பெப். 16

பீஹார் அசெம்பிளிக்கு நடந்த இடைத்தேர்தல்களில் தாய், மகன், தம்பி, பேரன் ஆகியோர் உட்பட ஒரு குடும்பம் முழுவதுமே வெற்றிபெற்றுள்ளது.

இங்குள்ள ராம்கர் ராஜா காமாட்ஜய நாராயண் சிங்கின் குடும்பமே பல தொகுதிகளிலும் வெற்றிபெற்றுள்ளது. [illegible]ரா, காண்டு என்ற இரு தொகுதிகளிலும் ராஜா வெற்றிபெற்றுள்ளார். ராஜாவின் [illegible] ராஜா மாதா [illegible] சரி தே[illegible] ஜரிதி என்ற தொகுதியில் வெற்றிபெற்றிருக்கின்றார்.

ராஜாவின் தம்பியாரான டாக்டர் பஸந்த நாராயண் சிங், பலூதார் தொகுதியில் வெற்றிபெற்றுள்ளார். பார்ஹி தொகுதியில் ராஜாவின் இந்திரா ஜிகேந்திரா வெற்றிபெற்றுள்ளார்.

ராஜாவின் மனைவி ராணி லலிதா ராஜலட்சுமியும் ராஜாவின் தம்பியின் மனைவியான ஸ்ரீமதி விஜய ராஜேயும் ஆகிய இருவரும் ஏற்கனவே [illegible]லிமெண்ட் மெம்[illegible] இருக்கிறார்கள்.

---

# "இரு வருடங்களாக அரசாங்கம் நன்கொடை வழங்கவில்லை"

### பெற்றோர்-ஆசிரியர்சங்கக் கூட்டத்தில் தீவுப்பகுதி எம். பி.

யாழ்ப்பாணம், திங்கள்

"பெற்றோர் தங்கள் குழந்தைகளை வித்தியாலயங்களில் சேர்த்துவிடுதல் மாத்திரம் தான் தங்கள் கடமை என்று எண்ணிவிடுகிறார்கள். இது முற்றிலும் தவறான கொள்கையாகும். ஒவ்வொரு குழந்தையினதும் ஆரம்பக் கல்வி தொடக்கம் இறுதி வரையும் பெற்றோர் ஆசிரியருடன் தொடர்புகொண்டு வித்தியாலயத்திலும், பிள்ளைகளது கல்வியிலும் கரிசனையுடையவர்களாயிருந்து வேண்டிய காலங்களில் ஆலோசனைகளும் ஒத்துழைப்பும் கொடுத்துவருதல்வேண்டும்."

இவ்வாறு புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் வித்தியாலயத்தில் நடந்த பெற்றோர்-ஆசிரியர் சங்க விசேஷ பொதுக் கூட்டத்திற்குத் தலைமைவகித்து பேசிய வித்தியாலய அதிபர் திரு. நா. நடராஜா கூறினார்.

ஊர்காவற்றுறை தொகுதி எம். பி. திரு. வ. நவரத்தினமும், வட்டார கல்வி அதிகாரி திரு. அ. சி. நல்லையாவும், வித்தியாலய அதிபர், ஆசிரியர்களால் மாலையிட்டு வரவேற்கப்பட்டனர்.

வித்தியாலயத்தின் கட்டிட நிலையையும் 'புதிய கட்டடத்தின் அவசியத்தையும் தமது பேச்சில் சுட்டிக்காட்டிய வித்தியாலய அதிபர் இங்கு நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையையும் நீக்கி உதவுமாறு கேட்டுக்கொண்டார்.

திரு. வி. நவரத்தினம் எம். பி. பேசுகையில், இவ்வருடம் கல்விப் பகுதியார் வழங்கும் நன்கொடைப் பணத்தில், இவ்வித்தியாலயத்தின் கட்டடத்திற்கும் நிச்சயம் பணம் ஒதுக்கித் தருவதாகவும், ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கித்தருவதாகவும் உறுதியளித்தார். கடந்த இரு வருடங்களில் தேசிய அரசாங்கம் எம். பிக்களுக்கு ஒதுக்கிக் கொடுக்கும் நன்கொடைப் பணத்தை வழங்கவில்லை என்று அவர் கூறினார்.

புங்குடுதீவு திருச்சபை ஊழியர் திரு. சு. நோ. சுகுணானந்தன், திரு. சு. ந. பிரான்ஸிஸ் சேவியர், திரு. மா. குமாரசாமி ஆகியோரும் பேசினர். பெற்றோர்-ஆசிரியர் சங்க உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் நியமனம் பெற்றனர். தலைவர்:- திரு. நா. நடராஜா, (அதிபர்) உப தலைவர்:- திரு. மா. குமாரசாமி, செயலாளர்:- திரு. வி. ஜே. விஜயரத்தினம், உபசெயலாளர்:- திரு. த. மகாலிங்கசிவம், பொருளாளர்:- திரு. ச. கனகரத்தினம். மற்றும் திரு. ந. சபாரத்தினம், திரு. ப. வன்னியசிங்கம், திரு. க. சுப்பிரமணியம், திரு. க. இராமலிங்கம் ஆகியோர் உறுப்பினர்களாக நியமனம் பெற்றனர். புங்குடுதீவு கிராமசபையின் இரண்டாம் வட்டார உறுப்பினர் திருமதி சு. யோகம்மா செயற்குழுவில் விசேஷ பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

---

# தமிழ்நாடு புதிய அமைச்சர்கள்

சென்னை. பெப். 16

தமிழ் நாடுபுதிய அமைச்சரவையில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள நான்கு அமைச்சர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் இங்குதரப்படுகின்றன.

### சி பா. ஆதித்தனர்

இவருக்கு வயது 64. தமிழ்நாடு சட்டமன்றஉறுப்பினராக 5 ஆண்டுகளும் மேல்சபை உறுப்பினராக 10 ஆண்டுகளும் இருந்திருக்கிறார். 1052-ல் மேல் சபையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்திருக்கிறார்.

1965-ல் சிறைசென்றார். 1928 முதல் 1933 வரையில் இங்கிலாந்தில் சட்டமும் பொருளாதாரமும் படித்து 'பார் அட்லோ பட்டம் பெற்றவர். திருச்சி ஜோசப் கல்லூரியில் எம். ஏ. பட்டம் பெற்றவர். அமெரிக்கா ரஷ்யா போன்ற உலகநாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்தவர். சிங்கப்பூரில் பரீஸ்டர் தொழில் நடத்தியவர். அங்கு கோவந்தம்மாளை திருமணம் புரிந்தார். இரண்டுபுதல்வர்களும் ஒரு மகளும் உண்டு. 1942-ல் மதுரையிலும் சென்னையிலும் தினத்தந்தி நாளிதழை ஆரம்பித்தார். 1959-ல் [illegible]

புதுக்கோட்டை மன்னர்கல்லூரியில் படித்தார். அடுத்து திருச்சி தூய ஜோசப் கல்லூரியில் படித்தார்.

புதுக்கோட்டை சமஸ்தானமாக இருந்த போது ஆலங்குடி தாலுகா ஆபீசிலும் குளத்தூர் தாலுகா ஆபீசிலும் வேலை பார்த்தார். சமஸ்தானம் இணைந்த பிறகு மதுரை மாவட்டம் அவனியா புரத்தில் ரெவின்யூ இன்ஸ்பெக்டராகவும் பின்னர் உசிலம் பட்டியில் உயர்தர குமாஸ்தாவாகவும், வேலை பார்த்தார்.

வேலையை ராஜினாமாச் செய்துவிட்டு 1957 தேர்தலில் குதித்தார். மனம் தளராமல் தொண்டாற்றினார். தி.மு.க, திருச்சி மாவட்ட பொருளாளராகவும் பொதுகுழு உறுப்பினராகவும் இருந்தார்.

### ஓ. பி. ராமன்

ஓ. பி. ராமன் 1936-ம் ஆண்டு ஜூலை மாதம் 22-ந் திகதி பிறந்தார். இவரது சொந்தஊர் திண்டுக்கல்லுக்கு கிழக்கே 15 மைல் தூரத்தில் உள்ள மணியாரம்பிட்டி. இவர் திண்டுக்கல் செயிண்ட் மேரீஸ் உயர்நிலைப் பள்ளியிலும் மதுரை அமெரிக்கன் [illegible]

---

### தடை உத்தரவு

குரும்பசிட்டி, ஞாயிறு

ஏழாலை வடக்கு சந்தியில் நிறுவப்பட்டுள்ள கல்லுடைக்கும் இயந்திரத் தொழிற்சாலையை தொடர்ந்து இயக்குவதற்கு மல்லாகம் நீதிபதி தடைஉத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஏழாலை கிராமசபைத் தலைவர் திரு. கே. சிவகுரு மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவொன்றில் பாடசாலை, தபால்நிலையம், வைத்தியசாலை, வாசிகசாலை, வியாபார நிலையங்களுக்கு அண்மையாக ஏழாலை வடக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல பாதுகாப்புகளையும் அளிக்குமென்று பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சன் மேற்கு ஜெர்மனியிலிருந்து இங்கு திரும்பியதும் தெரிவித்தார்.

மேற்கு ஜெர்மனியில் பிரிட்டிஷ் படைகள் தொடர்ந்திருக்குமென்று தெரிவித்த திரு. வில்சன், மேற்கு பெர்லின் அதிபர் தேர்தல் சம்பந்தமாக சோவியத்தின் ஆட்சேபம் அர்த்தமற்றது என்று குறிப்பிட்டார்.

மேற்கு பெர்லினின் அதிபர் தேர்தலை நடாத்துவதற்கு மேற்கு ஜெர்மனி தீர்மானித்துள்ளதை சோவியத் யூனியன் ஆட்சேபித்து, மேற்கு ஜெர்மன் அதிபர் மேற்கு ஜெர்மனிக்குச் சென்று திரும்பியுள்ளது தெரிந்ததே.

மேற்கு பெர்லின் அதிபர் தேர்தல் நடக்க இருப்பதைத் தொடர்ந்து கிழக்கு ஜெர்மன் தமது வீதிகள் வழியாக மேற்கு ஜெர்மன் துருப்புகளும், சட்டசபை அங்கத்தவர்களும் மேற்கு ஜெர்மனுக்குப் போவதைத் தடுத்துள்ளது.

கொழும்பு, ஞாயிறு

'பஸ்கட்டணம் உயரமாட்டாது' என்று தேசிய சேவை அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசா அறிவித்துள்ளார்.

## ஜப்பான் சென்றார்

உடுப்பிட்டி, ஞாயிறு

கரவெட்டியைச் சேர்ந்த திரு. எஸ். சிவசிதம்பரம் கப்பல், கடற்படிப்பை மேற்கொள்ளுவதற்காக ஜப்பான் சென்றுள்ளார். இவர் ஜப்பானில் நான்கு வருடகாலம் கப்பல்படிப்பில் ஈடுபடுவார். சிரேஷ்ட சுகாதாரப் பரிசோதகர் திரு. சி. என். சண்முகம்பிள்ளையின் சிரேஷ்ட புத்திரரான இவர் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றின் பழையமாணவராவார்.

இரு தொகுதிகளிலும் ராஜா வெற்றி பெற்றுள்ளார். ராஜாவின் தாயாரான ராஜா மாதா சஸாங்க மஞ்சரி தே[illegible] ஜரிதி என்ற ராஜாவின் தம்பியின் மனைவியான ஸ்ரீமதி விஜய ராஜே யும் ஆகிய இருவரும் ஏற்கனவே பார்லிமெண்ட் மெம்பர்களாக இருக்கிறார்கள்.

# அண்ணாவின் நாற்காலிக்கும் கருணாநிதி மரியாதை

சென்னை, பெப். 16

அமரர் அண்ணாதுரை முதலமைச்சராகவிருந்த பொழுது அமர்ந்த நாற்காலியையும் மேசையையும் தற்போதைய முதலமைச்சர் திரு. கருணாநிதி உபயோகிப்பதில்லை.

அண்ணா அமர்ந்த நாற்காலியில் அமரவும் அவர் பாவித்த மேஜையைப் பாவிககவும் தமக்கு தகுதி காணாது என்று திரு. கருணாநிதி கருதுகிறார். அண்ணாவுக்கு மரியாதை செலுத்துமுகமாக அவைகளை அண்ணா அலுவல்களைத் கவனித்த அதே அறையில் ஒரு பக்கத்தில் வைத்திருக்கிறார்கள். அந்த மேஜையின்மீது நிறைய ரோஜாப் பூக்கள் வைக்கப்படுகின்றன. திரு. கருணாநிதி தமக்கு வேறுநாற்காலியும் மேஜையும் வைத்துக்கொண்டுள்ளார்,

முன்பு இருந்த முதல் அமைச்சர்கள் வடக்கு பக்கம் திரும்பி உட்கார்ந்து இருந்தார்கள். திரு. கருணாநிதி கிழக்குப்பக்கம் திரும்பி அமர்கிறார்.

மாலை திருமணம் புரிந்தார். இரண்டுபுதல்வர்களும் ஒரு மகளும் உண்டு. 1942-ல் மதுரையிலும் சென்னையிலும் தினத்தந்தி நாளிதழை ஆரம்பித்தார். 1959-ல் அதன் பொறுப்புகளிலிருந்துவிலகிஅரசியலில் முழுமையாகப் பிரவேசித்தார். காங்கிரஸ் ஆட்சியில் 4முறை சிறை சென்றார். 'உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு' என்ற இலட்சியத்தைக் கொண்ட நாம் தமிழர். இயக்கத்தை ஆரம்பித்தவர். 1966-ல் தி.மு.க.வில் சேர்ந்தார் பொதுத் தேர்தலில் தி.மு.க. சார்பில் வெற்றி பெற்றார். தி.மு. க. ஆட்சிக்கு வந்ததும் சட்ட பேரவைத் தலைவராக (சபாநாயகர்) பதவி ஏற்றார், கடந்த ஆண்டு ஆகஸ்டுல் அந்தப் பதவியைத் துறந்தார். 'தமிழ் பேரரசு' என்ற நூலின் ஆசிரியர் 1905 செப்டம்பர் 27-ம் திகதி பிறந்தவர்.

சொந்தஊர் திண்டுக்கல்லுக்கு கிழக்கே 15 மைல் தூரத்தில் உள்ள மணியாரம்பிட்டி. இவர் திண்டுக்கல் செயிண்ட் மேரீஸ் உயர்நிலைப் பள்ளியிலும் மதுரை அமெரிக்கன் கல்லூரியிலும் படித்தார். கல்லூரியில்படிக்கும்போதே ஓ. பி. ராமன் தி.மு. கழகத்தில் பற்றுதல் உள்ளவராக இருந்தார். பி. ஏ. பட்டம் பெற்ற பிறகு இவர் அரசாங்க வேலையில் சேர்ந்தார். சிலவருடம் கழித்து அந்த வேலையை ராஜினாமாச் செய்துவிட்டு சட்டக் கல்லூரியில் சேர்ந்தார் பி. எல். பட்டம் பெற்று வக்கீல் ஆனார்.

திண்டுக்கல்லில் வக்கீல் தொழில் நடத்தி வந்தார். கடந்த 67 தேர்தலில் மேலூர் தெற்கு தொகுதியில் மந்திரி கக்கனை எதிர்த்து போட்டியிட்டு வெற்றி பெற்றார். இவர் திருமாணமாகாதவர்.

தாக்கல் செய்துள்ள மனுவொன்றில் பாடசாலை, தபால்நிலையம், வைத்தியசாலை, வாசிகசாலை, வியாபார நிலையங்களுக்கு அண்மையாக ஏழாலை வடக்குச் சந்தியில் கிராம சபையிடம் அனுமதி பெறாமல் கல்லுடைக்கும் இயந்திரம் நிறுவப்பட்டு இயங்கிவருவதால் பொதுமக்களுக்குத் தொல்லையும் தூசி போன்றவற்றால் சுகாதாரசீர்கேடும் விளைவிக்கப்படுவதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

திரு. சிவகுருவின் சாட்சியத்தை நீதியதி பதிவு செய்தபின் தடைஉத்தரவு பிறப்பித்து பிரதிவாதிக்கு சம்மன்ஸ் அனுப்புமாறு உத்தரவிட்டு அடுத்த மாதம் 7-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிட்டுள்ளார்.

அட்வகேட் ஆர். ஈ. தம்பிரத்தினம் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன்வாதிதரப்பில் ஆஜரானர்.

# 'அயூப்புடன் ஆலோசனை நடத்தவேண்டாம்'

## லாகூரில் ஆண்களும் பெண்களும் ஆர்ப்பாட்டம்

லாகூர், பெப். 16

பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு அதிபர் அயூப்கான் விடுத்துள்ள அழைப்பை எதிர்க்கட்சித் தலைவர்கள் புறக்கணிக்கும்படி கோரி ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களுமான பாகிஸ்தானியர் நேற்று இருபெரிய ஊர்வலங்களை நடத்தினார்கள்.

அயூப் எதிர்ப்பு கிளர்ச்சிகளின் போது பொலிஸ் துப்பாக்கிக்குப் பலியான மாணவர் ஒருவரின் சடலத்தை ஊர்வலமாக எடுத்துச் சென்ற ஆயிரக்கணக்கானவர்கள் அயூப்கான் ஆட்சிக்கு எதிராக கோஷங்களை எழுப்பினார்கள். நாளைய தினம் தம்முடன் பேச்சுவார்த்தைகள் நடத்த அயூப் விடுத்துள்ள அழைப்பை நிராகரிக்கும்படி எதிர்க்கட்சித்தலைவர்களை ஊர்வலத்தினர் கோஷங்கள் மூலம் கேட்டுக் கொண்டார்கள். ஊர்வலத்தில் சென்றவர்கள் கறுப்பு தோள்பட்டிகளை அணிந்தினர். பெரிய கறுப்புக் கொடியொன்றையும் அவர்கள் எடுத்துச்சென்றனர்.

இரண்டாவது ஊர்வலம் முன்னாள் வெளியுறவு அமைச்சர்களும் தற்பொழுது அயூப்கானின் அரசியல் எதிரியுமான சுப்பிகார் அலிபூட்டோவின் மனைவி நாசரத்பூட்டோவின் தலைமையில் நடைபெற்றது. ஆயிக்கணக்கான பெண்களுடன் ஆயிரக்கணக்கான மாணவர்களும் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டார்கள்.

பாகிஸ்தா எதிர்க்கட்சிகளின் மக்கள் நடவடிக்கைக் குழு நேற்றுக்கூடி அயூப்பின் அழைப்பு பற்றி ஆலோசித்தது. இந்தக்குழுவில் ஒவ்வொரு கட்சியிருமிருந்து இரு பிரதிநிதிகள் வீதம் எட்டு எதிர்க்கட்சிகளின் சார்பிலும் 16 அங்கத்தவர்கள் கலந்துகொண்டார்கள். இந்தக்குழு இன்றும் மீண்டும்கூடி ஆலோசனைகள் நடத்தவிருக்கின்றது.

அயூப்பின் இன்னொரு அரசியல் எதிரியான எயார் மார்ஷல் அஸ்கர்கான், நாளை நடக்கும் பேச்சுக்களில் திரு. பூட்டோவையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று கருத்து வெளியிட்டிருக்கிறார். தற்பொழுது காவலில் இருக்கும் முக்கிய இரு எதிர்க்கட்சித் தலைவர்களையும் இந்தப் பேச்சுக்களில் கலந்துகொள்ளச் செய்ய வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்டுப்படுத்தப்பட்ட ஒரு பேச்சுவார்த்தையின் மூலம் நாட்டினர். அரசியல் நிலைமைக்கு தீர்வுகண்டுவிட முடியாது என்றும், தாமும், தற்பொழுது காவலில் வைக்கப்பட்டுள்ள மெஹ்புரகுமானும் இந்தப் பேச்சுக்களில் கலந்துகொள்ளவேண்டும் என்று திரு. பூட்டோவும் கருத்துவெளியிட்டிருக்கிறார்.

# பூட்டோ மீது கொலை முயற்சி

நேற்று முன்னாள் வெளிநாட்டு அமைச்சர் திரு. சுல்பிகார் அலிபூட்டோவைக் கொலைசெய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சியொன்று முறியடிக்கப்பட்டது. திரு. பூட்டோ, தடுப்புக்காவலிலிருந்து விடுதலையானதையொட்டி நடைபெற்ற பெரிய ஊர்வலமொன்றில் அவர் போய்க்கொண்டிருக்கையில், கூட்டத்திலிருந்த ஒருவர் சிறிய சுழல் துப்பாக்கியொன்றை எடுத்து பூட்டோவை நோக்கி குறிவைத்தார். உடனே கூட்டத்திலிருந்தவர்கள் அந்த ஆளை மடக்கிப்பிடித்துவிட்டார்கள். பின்னர் அவர் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

# நாகவிக்ரகத்தை தரிசிக்கும் பாம்பு

உதகை, பெப். 16

உதக மண்டலத்திலிருந்து 10 மைல் தூரத்திலுள்ள மஞ்சக்கம்பை என்ற படகாகுக் கிராமம் திடீரென பிரபலத்துவம் அடைந்து இன்று ஒரு யாத்திரை ஸ்தலமகியுள்ளது.

படகர்களின் தெய்வமான ஹெத்தே அம்மனுக்கு கோயில் கட்டிவருகிறார்கள். இக்கிராமமக்கள் கோயிலைச் சுற்றி உள்ள இடத்தை துப்புரவு செய்துகொண்டிருந்தபோது பூமிக்கடியில் ஒரு சிறு குகையில் படமுள்ள நாக சர்ப்ப விக்ரஹம் இருப்பதைக் கண்டனர். மண் விக்ரஹமானாலும், பாலாபிஷேகம் செய்தும் விக்ரஹத்தின் வடிவமோ, அமைப்போ மாறவில்லை என்று கூறப்படுகிறது. இந்தவிக்கிரஹத்தை பிரதிஷ்டை செய்து மக்கள் தினசரி பூஜைகள் நடத்தி பூஜித்து வருகிறார்கள்.

சிலநாள் கழித்து ஒரு நாக சர்ப்பம் அந்த இடத்தில் தோன்றியது. இந்தநாகப் பாம்பு நாகேஸ்வர விக்ரஹத்தை காத்துவருவதாகவும், தினசரி அங்கு வந்து நாகதேவனை தரிசித்துவிட்டு குகைக்குள் மறைந்துவிடுவதாகவும் சொல்லப்படுகிறது.

இந்த அதிசயம் பற்றி கேள்விப்பட்டு, எல்லா இடங்களிலிருந்தும் மக்கள் பெரும் எண்ணிக்கையில் நாகதேவனை தரிசிக்க வந்து கொண்டிருக்கின்றார்கள். ஸ்ரீஹெத்தே அம்மனின் காவல் தெய்வமாக இந்த நாகதேவன் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

## 'செயலில் காட்டவேண்டும்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

'ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற அண்ணாவின் கொள்கையை தமிழராகிய நாம்சொல்லில் மட்டுமல்ல செயலிலும் காட்டமுனைய வேண்டும். முக்கியமாக எமக்குள் இருக்கும் சாதி வேற்றுமையை அறவே போக்கவேண்டும். எப்பொழுது நாம் இம்மனப்பான்மையை நீக்கி நாம் எல்லோரும் ஓர் இனம் என்ற மனப்பான்மையுடன் வாழுகின்றோமோ அப்பொழுது தான் அண்ணாவின் கொள்கையை பூரணமாகப் பின்பற்றுபவர் களாவோம்.

மேற்கண்டவாறு தமிழரசுக்கட்சி கோண்டாவில் கிளையினல் நடாத்தப்பட்ட அண்ணாவின் அஞ்சலிக்கூட்டத்தில் கோப்பாய் எம். பி. திரு. கதிரவேற்பிள்ளை பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்திற்கு பண்டிதர் இராசையா தலைமை வகித்தார். அண்ணாவின் திருவுருவப்படம் தாங்கிய வண்ணம் ஓர் ஊர்வலம் கோண்டாவில் கிழக்கு தமிழரசு வாலிபமுன்னணிஅலுவலகத்தில் இருந்து புறப்பட்டு கூட்டமைதானத்தை அடைந்தது.

## ப.உ. சண்முகம்

வயது 45. வடஆற்காடு திருவண்ணாமலையைச் சேர்ந்தவர். 23 வயதில் திருவண்ணாமலை நகரசபைத் தலைவரானார். 15 ஆண்டுகள் நகரசபை உறுப்பினராக இருந்துள்ளார். பத்தாம் வகுப்புவரை படித்துள்ளார்.

இவர் தி. மு. கழகம் நடத்திய எல்லாப் போராட்டங்களிலும் கலந்து கொண்டிருக்கிறார், இவர் சிறந்த பேச்சாளர். 1957 திருவண்ணாமலை தொகுதியில் போட்டியிட்டு ஜெயித்தார். 62-ல் அதே தொகுதியில் தோல்வியடைந்தார். ஆனால் அங்கு காங்கிரஸ் உறுப்பினர் மரணம் அடையவே 63-ல் நடந்த இடைத் தேர்தலில் போட்டியிட்டு ப.உ' சண்முகம் மீண்டும் வெற்றி பெற்றார்.

67 தேர்தலில் மீண்டும் இவர் தோல்வியடைந்தார். அதன்பிறகு இவர் ஆசிரியர் தொகுதியில் இருந்து தமிழக மேலவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருக்கு இருமனைவிமார்கள் உள்ளனர்.

## கே. வி. சுப்பையா

திருச்சி மாவட்ட ஆலங்குடி தொகுதியில் இருந்து தமிழ்நாடு சட்டசபைக்கு கடந்த பொது தேர்தலில் தேர்ந்தெடுக்கப் பட்டவர். கே.வி. சுப்பையா வயது 47 பி.ஏ. பட்டதாரி.

ஆலங்குடி ஆரம்பப் பள்ளியில் படித்தார். பிறகு


# லங்காலோஹ

இலங்கைத் தயாரிப்பு உலோகப் பொருள்கள்

**சிறந்த ரகம், நம்பிக்கை, நீடியகால பாவனைக்கு**

**லங்காலோஹ மண்வெட்டிகள்**

அளவு 8'x10''—சில்லறை விலை ரூ. 8-25 ஒன்று
அளவு 7'x10''—சில்லறை விலை ரூ. 7-50 ஒன்று

**யாழ்ப்பாண மோஸ்தர் மண்வெட்டி**

உயர்ந்த உறுதி வாய்ந்த உலோகம்

**நிறை 4 இறுத்தல்**



சில்லறை ஒன்றுக்கு

ரூ. 14-00

**இலங்கை அரசாங்க உலோகப்பொருட் கூட்டுத்தாபனம்**

242, ஹவ்லொக் ரோட், கொழும்பு-5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி வாக்கு

''பாவத்தை வெறுக்கவேண்டும்; பாவம் செய்தவரை அல்ல என்ற நெறியை எளிதில் புரிந்துகொள்ளலாம்! ஆனல் காரியத்தில் செய்வது அரிது. ஆதலால்தான் உலகில் வெறுப்பு என்னும் நஞ்சு பரவுகிறது.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: ''EELANADU'' Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், இலக வருஷம் மாசிமாதம் 6-ந் திகதி
(17 - 2 - 69)


## வகுப்புவாத ஆபத்து

தேர்தல் காலம்நெருங்குவதால் வகுப்புத் துவேஷத்தைக் கிளப்பி நாட்டின்அமைதியைக் குலைத்து அரசியல் இலாபம் தேடுவதற்கு சில அரசியல்வாதிகள் முனைந்துள்ளனர். இதற்கு சில பொறுப்புள்ள பத்திரிகைகளும்கூட தூபம்போட ஆரம்பித்துள்ளன. தேசிய ஐக்கியத்தில் நம்பிக்கை வைத்து அதை நாடுமுழுவதும் வலியுறுத்தி வரும் பிரதமர், இவ்விஷயத்தில் உடனடியாகக் கவனம் செலுத்தி வகுப்புத் துவேஷத்தைக் கிளப்பும் முயற்சியை முளையிலேயே கிள்ளிவிடவேண்டும். இல்லையேல் தேசிய ஐக்கியத்தை உருவாக்குவதிலும் உணவு உற்பத்தியை அதிகரிப்பதிலும் அவர் எடுத்த முயற்சிகள் யாவும் ''விழலுக் கிறைத்த நீராகிவிடும்''.

தமிழ் நாட்டில் தி.மு. கழகம் ஆட்சிக்கு வந்ததைப் பயன்படுத்தி உபதேர்தல்களில் தி. மு. க. பூச்சாண்டியைக் கிளப்பிபிரசாரம்செய்து அதனல் கிடைத்த வெற்றியின்விளைவாக, அண்ணவின் மறைவுக்குப்பின் தமிழ் நாட்டில் கருணநிதி தலைமையில் புதிய தி.மு. க. ஆட்சியையும் இங்கு அண்ணவின் மறைவுக்காக தமிழ் மக்கள் கண்ணீர் சிந்தியதையும் வைத்து சிங்கள-தமிழ் துவேஷத்தைக் கிளப்பி அரசியல் இலாபம் தேட சில அரசியல் வாதிகள் முனைந்துள்ளனர். இதே சமயம் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்படி இந்தியா போவதா இலங்கையிலிருப்பதா என்று இன்னமும்ஒரு முடிவுக்கு வராமலிருக்கும் இந்திய வம்சாவழியினரை இந்தியாவுக்கு அனுப்புவதற்கும் இங்கு துவேஷத்தைக் கிளப்ப சிலர் திட்டமிட்டு செயலாற்ற முனைந்துள்ளதாகச் சந்தேகிக்கவும்இடமுண்டு. சில தினங்களுக்குமுன் தலவாக் கொல்லையில் நடந்த ஒரு வைபவத்தில் ஒருசிலருக்கிடையில் நடந்த கைகலப்புச் சம்பவத்தை இந்திய தமிழர்களான திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும் சிங்கள மக்களுக்குமிடையில் சண்டைநடந்ததாகபொறுப்பு வாய்ந்தஓர் ஆங்கில தேசீயத் தினசரி முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டிருக்கிறது. இதர பகுதிகளில் நட்புறவுடன் வாழும் மக்களுக்கிடையில் மனக்கசப்பை ஏற்படுத்தி தேசீயஐக்கியத்தைக் குலைத்து மீண்டும் இங்கு ஒரு வகுப்புக் கலகத்துக்கு தூபம்போடும் விஷமத்தனம். இது பத்திரிகா தர்மமுமல்ல; பத்திரிகை சுதந்திரமுமல்ல.

அமரர் அண்ணதுரை, அறிஞர், பண்புள்ளவர், ஒரு நல்ல தலைவர். அவரின் மறைவு தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல உலகுக்கே பேரிழப்பு. அவரின் மறைவுக்காகக் கண்ணீர் விடுவதிலோ, அவருக்கு அஞ்சலி செலுத்துவதிலோ யாரும் தவறு சொல்ல முடியாது; தவறு காண்பவர்களைப் பற்றிக் கவலைப்படவேண்டியதுமில்லை. 'மொழி, கலை, கலாசார ரீதியில் தமிழ்நாட்டுடனும் இந்தியாவுடனும் தொடர்பு வைத்திருங்கள். அரசியல் அடிபபடையில் நீங்கள் வேறு, நாங்கள்வேறு' என்று திரு. அண்ணதுரை கடல்கடந்து வாழும் தமிழ் மக்களுக்குப் பல தடவைகளிலும் கூறிவந்திருப்பதை இங்குள்ள தமிழ் மக்கள் இச் சமயத்தில் நினைவு கூருவது நல்லது.

இங்கு தி.மு.க. பூச்சாண்டி காட்டி துவேஷத்தைக் கிளப்பும் முயற்சிகளுக்கு பிரதமர் துரித நடவடிக்கை எடுக்கும் அதே சமயம் அண்ணவைப் பின்பற்றும் தமிழக முதலமைச்சர் கருணநிதியும் இலங்கை, வாழ் தமிழ் மக்கள் சம்பந்தமாக தமது நிலையைத் தெளிவுபடுத்தி ஓர் அறிக்கை விடுவது இங்கு தப்பெண்ணங்கள் நீங்கவும் நல்லெண்ணம் ஓங்கவும் உபயோகமாக இருக்கும்.

## இன்றுபகவான் பரமஹம்ஸர் ஜயந்திதினம்

# 'கடவுளைக் காண்கிறேன்; உனக்கும்காட்டமுடியும்' என்ருர்

— சுவாமி சர்வாதீதானந்தா —
(ஸ்ரீராமகிருஷ்ணமடம், கதிர்காமம்)

நூற்று முப்பத்தி ஞன்கு வருடங்களுக்கு முன்வங்காள மாகாணத்தின் கண் உள்ள ஓர் சிறிய கிராமத்தில் பகவான் ஸ்ரீ ராமக்கிருஷ்ண பரமஹம்ஸர் திருவவதாரம் செய்தார். இப்பெருந்தகையின் பெயரில் உலகம் முழுவதும் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளும், மருத்துவ மனைகளும், தர்மஸ்தாபனங்களும் அனுதை இல்லங்களும், ஆச்சிரமங்களில் இடம் பெறும் சமயச் சொற்பொழிவுகளும், மாணவர் விடுதிகளும் கணக்கில் அடங்கா. இவை யாவும் இப்பெரியாரின் நாமத்தைக் கொண்டுதான் இயங்குகின்றன. இதற்குக்காரணம் அவதார புருஷர்என்பதற்கு சற்றேனும் ஐயமில்லை.

எளிய குடும்பதில் பிறந்தார் ஸ்ரீ ராமக்கிருஷ்ணர்; ஆனல் உயர்ந்த தத்துவங்களே நமக்களித்தார். அவர் மொழிகளெல்லாம் உபநிடதங்களே. பழங்கால ரிஷிகளைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கின்ருேம். அவர்களுடைய ஒவ்வொரு சொற்களும், ஒவ்வொரு மந்திரங்களும், வேதவாங்கியங்களும் பல்லாண்டுகளாகத் திகழ்கின்றன. அதேபோல்தான் ஸ்ரீ ராமக்கிருஷ்ணரின் பொன்மொழிகள், உபதேசங்கள், சத்சம்பாஷனைகள் ஆழ்ந்த தத்துவங்களை பிரதிபலிக்கின்றன.

மேலும் அவருடைய பண்பும், ஆசாரமும் நமது தேசத்தின் கலாசாரங்களை தழுவியுள்ளவை. இத்தகைய பொக்கிஷங்களை நம் இளம் சமுதாயம் நன்கு கவனிக்க வேண்டும். ஸ்ரீ ராமக்கிருஷ்ணர் தம் அடியார்களுக்கு அறிவுரைகள் புகட்டும் பொழுது உபகதைகளைக் கையாள்வது வழக்கம். ஆதி சங்கரர் பெரிய தத்துவங்களை எளிய முறையில் உபகதைகள் மூலம் தெளிவாக விளக்கியுள்ளார். ஸ்ரீ ராமக்கிருஷ்ணர் திருவாய் மலர்ந்தருளிய உபகதைகள் மூலம் உயரிய பக்தி, ஞானவைராக்கிய நீதிகள் பொலிந்து கிடக்கின்றன. தினசரி வாழ்க்கைக்கு உகந்த உயரிய உபதேசங்கள் உபகதைகள் போல் இவற்றுள் அடங்கியுள்ளன.

ஆசாபாசங்களால் எற்படும் அபாயங்களைப் பற்றி அவர் ஓர் அழகிய உபகதை கூறியுள்ளார். வெயிலில் அலைந்து திரிந்த ஓடு தேசாந்திரி தூரத்தில்உள்ள ஒரு மரத்தைக் கண்டு அதன் நிழலில் களைப்பாறச் சென்ருன். அங்கு சென்றவுடன் ஒரு நல்ல மிருதுவான மெத்தை இருந்தால் எவ்வளவு சுகமாக உறங்கலாமென்று சிந்தித்தான். உடனே தன் பக்கலில் ஒரு மிருதுவான பஞ்சு மெத்தை இருக்கக் கண்டான். இது எவ்விதம் நிகழ்ந்தது என்று தெரியாது திகைத்தான். கற்பதருவின் கீழ் தான் அமர்ந்திருட்பதை அவன் உணரவில்லை. சலித்ததேகத்தில் உள்ள வலியினை நீக்குவதற்கு இளமங்கையர் இருந்து கைகால்களைப் பிடித்தால் எவ்வளவு சுகமாய் இருக்கும் என்று நினைத்தான். நினைத்த கணத்திலே இருநங்கையர் தோன்றிப் பணி செய்தனர். அவன் வியப்பு எல்லையைத்தாண்டியது. பசிப்பிணி நீங்க அறுசுவை பொருந்திய உண்டி கிடைக்காதா என வினவினுன். அக் கணமே அவையும் கிடைத்தன. மிருதுமெத்தையில் படுத்துறங்குமுன் ஓர் புலி வந்தால் என்னசெய்வது எனஎண்ணியதுதான் தாமதம் உடனே புலி ஒன்று வந்து கொன்றுவிட்டது. மனக்கோட்டையும் பேராசையும் அடியோடு அழிந்தன.

இங்ஙனமே தான் உலகில் மனிதர்கள் அவா என்னும் வலைக்கண் அகப்பட்டு வீழ்கின்றனர். கடவுளும் நம் விருப்பங்களையும் ஆசைகளையும் கற்பதருப்போல் முன்பின்னதாகத் தந்து கொண்டிருக்கின்ருர். ஆசை நிறைவேறுங்கால் 'புலி வந்தால் என்னசெய்வது என்ற எண்ணம்' கவலையுருவில் நம்மிடம் தோயுறும. நோய், கஷ்டம், ஏழ்மை, சாக்காடு உருவத்தில் அந்தப் 'புலி' நம்மைப் பயமுறுத்திக்கொண்டு செல்கின்றது. ஆகையால் சிறிதுசிறிதாக ஞானம், பக்தி, யோகம் வைராக்கியம் முதலியவற்றை இளமையிலிருந்தே கையாண்டு வந்தால் இவற்றிற்கு அஞ்ச வேண்டியதில்லை என்றும் அவன் ஆணை இன்றி நம்மை யாரும் அவலப்படுத்த முடியாதென்றும் கற்பதரு வடிவில் திகழும் கடவுளை நம்பினேர் கைவிடப்படார் என்றும் இவற்ருல் பகவான் விளக்குகின்ருர்,

ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ஸர் உலகரீதியில் ஸ்ரீசாரதாதேவியாரோடு மனத்தாலும் நம்மைப்போல் இல்வாழ்க்கை நடத்தவில்லை. அதற்கு அவர் கூறியுள்ள மற்றுமோர் உபகதையினை இங்கு சிந்திப்போம்.

''ஒரு நாள் கார்த்திகேய பகவான் ஒரு பூனையினை தம் விரல் நகத்தால் புண்படுத்திய பின் அன்னை பார்பதி தேவியிடம் சென்ருர். அன்னையின் முகத்தில் கீறிய வடு ஒன்றிருப்பதைக் கண்டு கார்த்திகேய பகவான் வினவலானுர். அதற்கு அன்னையார், அதுவும் உன் கைநகம் செய்த செயல்தான் என்ருர். அதற்கு 'யான் உங்களை ஒரு போதும் புண்படுத்தியதில்லையே' என்று கூற, தாயார் அவருக்கு பூனையினைக் கீறியதனை நினைவுபடுத்தினர். 'பூனையைக் கீறினல் உங்கள் கன்னத்தில் வடு ஏற்படக் காரணம் என்ன' என்று கார்த்திகேயன் வினவ, 'உலகத்தில் உள்ள எல்லா உயிரிடத்தும் நான் இருக்கிறேன். எவ்வுயிரைத் துன்புறுத்தினுலும் அது என்னை வருத்தியதாகும்' என்று தாயார் பதில் கூறினுர். கார்த்திகேயன் அன்றே தான் ஒரு பெண்ணையும் மணப்பதில்லை என்று உறுதி பூண்டான். ஏனெனில் ஒவ்வொ[illegible] மாதுவும் அவனுக்கு அன்னையாகவே தோன்றினர். ஸ்ரீராமகிருஷ்ணர் ஸ்ரீசாரதா தேவியாரை பூஜா பீடத்தில் வைத்து ''சாடசி பூஜை'' செய்துள்ளார். [illegible]விடத்தில் நாம் நம் தாய் அன்னை

# உன் இதயத்தை தந்திடு அண்ணு!

## தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணநிதி

(அண்ண மறைவையொட்டி கலைஞர் மு. கருணநிதி இயற்றியகண்ணீர் அஞ்சலிக் கவிதை இது. சென்னை வானெலியில் அவர் இந்தக் கவிதையை அரங்கேற்றினர்)

(நேற்றைய தொடர்ச்சி)

திக்கெட்டும் தமிழ் முழக்கம்
திசையெங்கும் சொன்மாரி
வக்கற்ருேர் வகையற்ருேர்
வாழ்வதற்குத் திட்டம் கோரி
வண்டாகச் சுற்றுகின்ருர் மேடையேறி!
எழுகின்ருர் அண்ண
ஏடெல்லாம் வீடெல்லாம் தமிழ்
நாடெல்லாம்—புதுமை மணக்குதங்கே ...
''ஏடா தம்பி எடுடா பேன...''
எத்தனை உணர்ச்சி? எத்தனை எழுச்சி!
கத்தியைத் தீட்டாதே
புத்தியைத் தீட்டு''
கருத்துப்பேழை—கற்பூர பெட்டகம்...!
''மரக்கிளையிலே பிணம்
வெந்த புண்ணிலே வேல்;''
மறந்திடப் போமோ; மனங்கவர் வாசகம்.
''சாலை யோரத்திலே வேலையற்றதுகள்
வேலையற்றதுகளின் உள்ளத்தில்
விபரீத எண்ணங்கள்
வேந்தே அதுதான் காலக்குறி''
அண்ணனுக்கன்றி யாருக்கு வரும்
இந்த அழகுநடை?
அறிவுநடை?

'கோடு உயர்ந்தது குன்றம் தாழ்ந்தது'
தமிழகம் மறவாத் தலையங்க மன்ருே?
''இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்
தம்பியுடையான் படைக் கஞ்சான்''
ஒப்பிலா வரிகள் உரைத்திடும் பனுவல்
மனேன்மணியம் எனினும்—நம்
மனதில் பதித்தவர் அண்ணவன்ருே!
'மாற்ருன் தோட்டத்து மல்லிகை மணக்கும்'
அரசியல் பண்பினை போதிக்கும் அழகே ...
''மறப்போம்—மன்னிப்போம்''
மாற்ருர் ஏசல் தாங்கிடும் மாண்பே!
எவர் கற்றுத் தந்தார் இதனை?
சுவர் வைத்துச் சித்திரம்
எழுதுதல் போல்
நயமிகு பண்புடன் அரசியல் நடாத்தல்
நன்றென்ருர் அண்ண
அதை மறுத்து
நாலைந்துபேர் குதித்திட்டார் என்ருல்
அவர் கண்டு சிரித்திட்டார் அண்ண—
அனைவரையும் ஓர்அன்னை பெற்றெடுக்க
வயிறு தாங்காக் காரணத்தால்
தனித்தனித் தாய் ஈன்றெடுத்த தம்பிகளே

## ஐயாறன் எழுதுவது

வட்டுக்கோட்டையிலே ஓர் அன்பர் வீட்டில் நல்ல பாம்பொன்று வந்து, வீட்டிலிருந்த பாலை அருந்தியதாம். இதைக் கண்ட அவ்வீட்டு மூதாட்டி, ''அம்மையே நாகபூஷணி! நாங்க தான் வருவதாகச் சொன்னமே. அதற்குள்ளாகவா இப்படிவந்து நினைப்பூட்ட வேண்டும்!'' என்று சொல்லி விட்டு, தன் மகனுரையும் பேரப்பிள்ளையையும் நயினதீவுக்கு அனுப்பிவைத்தாராம்.

ஆசிரியரான மகனுர் இதைத் தெரிவித்து, தம் இளவயதில் தமக்கு தெய்வ நம்பிக்கை சிறிதுமில்லை என்றும், பிராமணரை கையெடுத்து வணங்கும் வழக்கமில்லைஎன்றும், ஆனல் நீர்கொழும்பிலேகைலாசநாதக் குருக்களவர்கள், பக்திசிரத்தையுடன் சகஸ்ரநாம அர்ச்சனை செய்ததைக் கண்டதும், அவரைக் கைகூப்பி வணக்கம் தெரிவிக்கும் படி தம் மனம் உந்தியதாயும் தெரிவித்தார்.

வேலணையைச் சேர்ந்த ஒருவரிடம் யாழ்ப்பாணத்தில் ஒருவர் ஒரு முழுத் தேங்காயைக் கொடுத்து, நாகபூஷணி கோவிலுக்கு காணிக்கையாகச் செலுத்தும்படி கேட்டிருந்தாராம். அத்தேங்காயை தமது வீட்டுக்கு எடுத்துவந்து வைத்திருந்து, வசதியின்மையால் நயினை கோயிலுக்கு அனுப்பாமல், வீட்டுத் தோட்டத்தில் இத்தேங்காயைப் புதைத்து விட்டார். அத்தேங்காய் முளைத்து வளர்ந்தது. பக்கத்திலிருந்த தென்னங்கன்றுகள் காய்ந்ததெனினும் இக்கன்று மட்டும் வளர்ந்து, பாளையும் விட்டதாம். ஆனல் அந்தப் பாளையெல்லாம் பாம்பு போல் வளைந்து வளைந்து இருக்கவே அந்த அன்பருக்குப் பயம் வந்து, நயினை அம்மனுக்கு அக்காணிக்கை செலுத்தத் தவறியதற்காகவே இந்த எச்சரிக்கை என்று கருதி, அம்மரத்தில் காய்க்கும் தேங்காய்களை மாதாமாதம் நயினை கோயிலுக்கு பயபக்தியுடன் காணிக்கையாகச் செலுத்தி வருகிருராம்.

0 0 0

அக்காலத்திலே ஊரில் ஏதாவது வழக்கு ஏற்பட்டால், கோவிலுக்குச்சென்று அங்குள்ள பெரியோர்கள் மூலம் மரியாதையாக அதைத் தீர்த்துக்கொள்

ஆசிரியருக்கு…

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...லாற்று முன்றுனுள்ளதாகச் சந்தேகிக்கவும்இடமுண்டு. இலங்கைக்குமுன் தலைமக் கொல்லையில் நடந்த ஒரு வைபவத்தில் ஒருசிலருக்கிடையில் நடந்த கைகலப்புச்...

...இலங்கை, ... தமது மக்கள் சம்பந்தமாக தமது நிலையைத் தெளிவுபடுத்தி ஓர் அறிக்கை விடுவது இங்கு தப்பெண்ணங்கள் நீங்கவும் நல்லெண்ணம் ஓங்கவும் உபயோகமாக இருக்கும்.

## துறைமுகச் சீர்கேடு

கொழும்புத் துறைமுகத்தில் நடைபெறும்வேலைகள் திருப்தியளிப்பதாக இல்லையென்றும் ஜெக்கிலேயே இன்று கொழும்புத்துறைமுகத்தை மிகமோசமான துறைமுகமென்றும் இப்போது இலங்கை வந்திருக்கும் இலங்கை - பிரிட்டன் கப்பல் சேவையிருந்தித் தலைவர் திரு. எல். ஜீ. ஹட்சன் தெரிவித்திருப்பதையிட்டு இலங்கை மக்கள் நிச்சயம் வெறுமைப்படைய முடியாது. சென்ற வருடத்தில் நாளுக்கு சராசரி 250 தொன்னும், அதற்கு முன்னைய வருடத்தில் நாளுக்கு சராசரி 212 தொன்னும் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் இதை இந்தியா, பாகிஸ்தான் துறைமுகங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டுமென்றும் அந்தத் துறைமுகங்களில் தினமும் சராசரி 800 தொன் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படுவதாகவும் திரு. ஹட்சன் புள்ளி விபரங்களுடன் ஆதாரபூர்வமாக எடுத்துக் காட்டியிருக்கிறர்.

கொழும்புத் துறைமுகத்துக்கு வெளியே கப்பல்கள் வாரக்கணக்காகவும் சில சமயம் மாதக்கணக்காகவும் தங்கி நிற்பது நாடறிந்த விஷயம். நல்லதுறைமுகங்களும், அதுவும் துரிதமாக ஏற்றுமதி இறக்குமதி வேலைகள் நடைபெறுவதிலும்தான் ஒரு நாட்டின் பொருளாதார வளம் பெரிதும் தங்கியிருக்கிறது. கொழும்புத் துறைமுகத்தில் அடிக்கடிவேலைநிறுத்தங்கள் நடைபெற்று வந்ததும், இறக்குமதி ஏற்றுமதி வேலைகள் மந்தகதியில் நடைபெற்று வருவதும்தான் நமது நாட்டின் வருமானம் பெரிதும் பாதிக்கக் காரணமாகும். கப்பல்கள் அதிக நாட்கள் துறைமுகத்தில் தாமதிப்பதால் வர்த்தகம் பாதிக்கப்படுவதுடன் கப்பல் தாமதக் கட்டணமாக பெருந்தொகைப் பணம் கப்பல் கம்பனிகளுக்குச் செலுத்தவேண்டியும் ஏற்படுகிறது. துறைமுகத்தில் சீரான வேலைகள் நடைபெறுவதால் பலகப்பல் கம்பனிகள் கொழும்புத்துறைமுகத்துக்கு சரக்கு ஏற்றிவர மறுத்த சம்பவங்களுமுண்டு.

காங்கேசன்துறைக்கு திருப்பி விடப்பட்ட கப்பல்கள் சரக்குகளை துரிதமாக இறக்கி விட்டுத் திரும்பியிருக்கின்றன. இதை அமைச்சர்களும் பாராட்டியிருக்கிறர்கள். ஆயினும் இங்கு அடிக்கடி கப்பல்களை அனுப்ப அரசாங்கம் தயங்குகிறது. இந்திய அரசாங்கத்தின் சேதுசமுத்திரத் திட்டம் நிறைவேறியதும் கொழும்புத் துறைமுகத்துக்குக்கப்பல்களே வராமல்விடக் கூடும். கொழும்புத்துறைமுகத்தில் நிலைமை விரைவில் சீர்செய்யாவிடில் காங்கேசன்துறைத் துறைமுகத்தை விரைவில் சகல வசதிகளும் கொண்டதாக்கு துறைமுக விருத்திசெய்யவும் அரசாங்கம் தாமதிக்கக் கூடாது. இது வடக்குத் தெற்கு விஷயமல்ல; நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றிய விஷயம்.

...ஸ்ரீ ராமகிருஷ்ணர் திருவாய் மலர்ந்தருளிய உப கதைகள் மூலம் உயரிய ... வெறுங்கால் 'புலி வந்தால் என்னசெய்வது என்ற எண்...

# ஆசிரியருக்கு கடிதங்கள்

## கட்டாய இராணுவபயிற்சி

'சமாதான காலத்தில் கலப்பை பிடித்து உழுபவனே சண்டைக்காலத்தில் போர்க்களத்தில் வாளேந்தி பகைவனுடன் போரிடுகிறன்' என்று ஒரு திரைப்படத்தில் ஒரு காட்சி இடம் பெற்றது. இஸ்ரேலில் இப்போதும் இளைஞர்கள் கட்டாய இராணுவப் பயிற்சி பெற வேண்டும். பயிற்சி முடிந்ததும் சமாதான காலமானுல் அவர்கள் படிப்பவர்கள், படிக்கச் சென்றுவிடுவர்; தொழில் செய்பவர்கள் தொழிலுக்குச் சென்றுவிடுவர். யுத்தம் ஒன்று வந்தால் அரசாங்கம் அழைத்ததும் அவர்கள் போர்க்களம் செல்லப்புறப்பட்டுவிடுவார்கள். இதனுல் நிரந்தரஇராணுவத்தை சும்மாவைத்துப்பெருந்தொகை பணத்தை அவர்களுக்காகச் செலவிடவேண்டிய அவசியம் ஏற்படாது.

நமது நாட்டில் நிரந்தர இராணுவத்தைச் சும்மா வைத்திருக்கிறேம். வெளிநாட்டுப் படையெடுப்பு நமது நாட்டுக்கு இல்லை. இராணுவப் பயிற்சி பெற்ற நமது சிப்பாய்கள் யாரிடம் தங்கள் பயிற்சித் திறமையைக் காண்பிப்பது? இதனுல் தான் இங்கு இராணுவத் தாக்குதல்களும் பிரச்னைகளும் ஏற்படுகின்றன. நமது இராணுவத்தைக் கலைத்து விட்டு கட்டாய இராணுவப் பயிற்சித் திட்டத்தைக் கொண்டு வந்தால் என்ன? இதனுல் மாணவர்கள் மத்தியில் கட்டுப்பாடும் ஒழுங்கும் ஏற்படும்; இராணுவச் செலவும் மிஞ்சும். அரசாங்கம் சிந்திக்குமா?

கோ. இரத்தினம்
யாழ்ப்பாணம்.

---

நெக்குநெக்கு நினைப்ப
வர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னுர்
சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவும்
நீரும் கண்டு
நக்கு நிற்பர் அவர்
தம்மை நாணியே.
-- அப்பர் சுவாமிகள்.

## அண்ணுவுக்கு அஞ்சலி

அமரர் அண்ணுதுரைக்கு நாட்டின் பலபகுதிகளிலும் அஞ்சலி செலுத்தப்படுகின்றது. அஞ்சலி செலுத்துவதிலும் கட்சிகளுக்குள்ளும்சில இடங்களில் வேறுபாடு ஏற்படுகிறது. இதனுல் அஞ்சலிக் கூட்டங்கள் கூட சில இடங்களில் ரத்துச்செய்யப்பட்டுவிடுகின்றன. அண்ணுவைப்பற்றி மணிக்கணக்காகவோ, நாட்கணக்காகவோபேசுவதில்பயனில்லை. அண்ணுவின் தாரகமந்திரமான "கடமை, கண்ணியம் கட்டுப்பாடு" என்பவற்றை மறந்துவிட்டு அவருக்கு அஞ்சலி செலுத்துவதில் என்ன லாபம்?

க. நடராசா
கந்தர்மடம்

0 0 0

## 10,000 ஆண்டுகள் வாழ்க

பத்து ஆண்டுகள் நிறைவு பெற்ற 'ஈழநாடே' நீ பத்தாயிரம் ஆண்டுகள் நீடூழி வாழ்க ஈழத்துக்கும் தமிழ் மக்களுக்கும் நீ ஆற்றிய அரும்பெரும் சேவையை ஆயிரம் நாவுள்ள ஆதிசேடனுலும் அளவிடமுடியாது. தமிழருக்கும் தமிழ் உலகுக்கும், சமாதானத்தையும் சுபீட்சத்தையும் அரசியல் நட்பையும் சமூக ஐக்கியத்தையும் பொருளாதாரத்தையும் அத்தியாவசிய தேவைகளையும் சென்ற பத்து ஆண்டுகளிலும் எப்படி எடுத்துக்காட்டி சேவை செய்தாயோ அதேபோல் மென்மேலும் செயலாற்றி உனது ஒளிப்பிழம்புகளை ஒவ்வொரு கிராமந்தோறும் பிரகாசிக்கச் செய்யுமாறு வேண்டுகின்றேன்.

சி. இராமனுதன்
செட்டிகுளம்.

...வும் அவனுக்கு அன்னையாகவே தோன்றினர். ஸ்ரீராமகிருஷ்ணர் ஸ்ரீசாரதா தேவியாரை பூஜா பீடத்தில் வைத்து "சாடசி பூஜை" செய்துள்ளார். இவ்விடத்தில் நாம் நம் தூய அன்னையாரை பாரரட்டவேண்டும். நம் நாட்டில் அவதரித்த சீதா, சாவித்திரி போன்ற மாதர்குல மாணிக்கங்களைப் போல ஸ்ரீசாரதா தேவியும் ஒருவராவர். அவரை பகவான் வினவிய பொழுது இத்தூய வாழ்வினை வாழ்வதற்கு தேவி முன்வராதிருந்தால் ஸ்ரீராமகிருஷ்ணரின் அவதாரம் ஒருவேளை பயனற்றதாகியிருக்கும்.

துறந்தோர் தவம் பண்ணுதல் பல சித்திகளை அடைவதற்கு வழியாகும். ஆனுல் இவற்றுல் யாதொரு பயனும் இல்லை என்று காட்ட பரமஹம்ஸர் ஒரு சான்று கூறியுள்ளார். ஒரு சந்நியாசி தான் அடைந்த சித்திகளைப் பற்றி பெருமை கொண்டான். பரமஹம்ஸரிடம் தான் நீரின்மேல் நடக்க இயலும் எனக் கூறினுன். ஸ்ரீராமகிருஷ்ணர் அவனுடைய சித்தி ஒருபணம்தான் பெறும் என்று பதிலுரைத்தார். அக்காலத்தில் கங்கை நதியைக் கடக்க ஒரு பணம் தான். ஆகையினுல்தான் இவ்வாறு சொன்னுர். ஆகையால் சந்நியாசிகள் தங்கள் தவவலிமையால் அடையும் சித்திகளைப்பற்றி பெருமிதம் கூடாதென்றும் அவைகள் ஈஸ்வரனை அடைவதற்கு முட்டுக்கட்டைகள் என்றும் விளக்கியுள்ளார்.

பரமஹம்சரின் முதற்சீடா சுவாமி விவேகானந்தராவார். அவர் கல்லூரியில் பயின்றுகொண்டிருக்கையில் மனச்சாந்தி அடைய முடியாமல் காண்கின்றபெரியவர்களைவும், சாதுக்களையும், சந்நியாசிகளையும் "நீங்கள் கடவுளைக் கண்டதுண்டா! எனக்கும் காட்டுவீரா?" என வினவலானுர். ஆனுல் ஒருவரும் இவருக்கு மனநிறைவு உண்டாகும் வகையில் பதில் அளிக்கவில்லை. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரிடமும் வந்து அதே கேள்வியைக் கேட்டார். அதற்கு பரமஹம்ஸர் "ஆம், கடவுளைக் காண்கின்றேன். உன்னைக் காண்பதிலும் விட மிகத்தெளிவாகக் காண்கின்றேன். உனக்கும் வேண்டுமாயின் காட்டமுடியும்" என்து கூறி அனேகமுறை ஆனந்தவெள்ளத்தில் ஆழ்த்தியும் விட்டார்.

இத்தகைய செய்கையினுல் நடந்த பயனைத்தான் நாம் இன்று காண்கின்றேம்; அனுபவிக்கின்றேம். இது உலகெங்கும் ஒரு புத்துணர்ச்சியை ஊட்டி விட்டது. இராமக்கிருஷ்ணஇயக்கம் ஆரம்பிப்பதற்கும் வித்தூன்றியது. இத்தகைய அவதாரபுருடரின் ஞானம், பக்தி, யோகம், வைராக்கியம் முதலியன நிறைந்த அன்னுரின் உபதேசங்களை நம்மால் இயன்றளவு கடைப்பிடித்து, வாழ்ந்து ஏனையோரையும் இப்பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்கச் செய்து பயன்பெற்று, அன்னுரின் பாதமலர்களை இறைஞ்சி வாயார, மனமாரவாழ்த்தி நிற்பாம்.

...
அதை மறுத்து
நாலைந்துபேர் குதித்திட்டார் என்றுல்
அவர் கண்டு சிரித்திட்டார் அண்ணு—
அனைவரையும் ஓர்அன்னை பெற்றெடுக்க
வயிறு தாங்காக் காரணத்தால்
தனித்தனித் தாய் ஈன்றெடுத்த தம்பிகளே
என அழைத்து
கனிச் சுவையாய் கற்கண்டாய்த்
தேன் பாகாய் அன்புகாட்டி
பனிமலர் வீழ்த் தும்பியதாய்த் தழுவிக்
கொண்டார் — .
சொலல் வல்லார் சேதுப் பிள்ளைதனை
சோமசுந்தர பாரதியைச் சொற்போரில்
சொக்க வைத்தார் — பாவம்,
சிக்கவைத்தார்!
நீதிக் கட்சியென்று நெடியமதில்
சுவருக்குள்ளே — பணச்
சாதிக்குக் கட்சியாய் இருத்தலாகா தெனும்
கொள்கையாலே —அதனை
வீதிக்குக் கொண்டுவந்தார்
வீசிடுக வெள்ளையர்கள் பட்டத்தை யென்று
சேலத்து மாநாட்டில் தீர்மானம் போட்டு
—விட்டார்

அண்ணுவின் போர்க்
கோலத்தை எதிர்க்க மாட்டாமல்
கோலற்ற குருடர் போலக் கொள்கையற்றேர்
வீழ்ந்து போனுர்
தீரர் அண்ணு திராவிடர் கழகமெனும்
பெயர்மாற்றத் தீர்மானம் —
வீரர் கூடிய மாநாட்டில் கொண்டு வந்தார்.
அண்ணல் காந்தியார் அறவழி கண்டு
ஆங்கில ஆட்சியை அகற்றியபோது
துன்பநாளெனும் பெரியார் அறிக்கையை
மறுத்துத்
தொடங்கினுர் போரை!
இன்ப நாளிது! இனிய நாளிது!
என்பு தோலால் ஆளஇந்தியர்
அன்புறு காந்தியின் அருளால் இன்று
எழுந்தனர் அடிமைத் தளையினை அறுத்து
முழங்குவோம் விடுதலை முரசினை எடுத்து
என்றே அண்ணு, அன்றே சொன்னுர்...
அன்றுமுதல் அண்ணன்.அய்யா உறவினிலே
கீறல் வீழ
அதுநாற்பத் தொன்பதாம் ஆண்டினிலே
பிரிவாய்மாறி
முகில் கிழித்து வெளிக்கிழம்பும் முழுமதியாய்
முன்னேற்றக் கழகத்தை முகிழ்க்கச்செய்தார்
தலைவருடன் கூடிவாழ முடியாமல்
பெரும்பான்மைத் தோழருடன்
வெளியே வந்தும்,
நிலைகுலையா நம் அண்ணன் அன்று சொன்னுர்
அது,
நேற்று சொன்னதுபோல் இருக்கு தம்பி!

(தொடர்ச்சி நாளை வெளிவரும்)

MANOHARA
JAFFNA
Daily at 4-45,
7-00, & 9-45 p. m.
Pre Poya-Poya 10-30 a. m.
Raquel Welch
in
ONE MILLION
YEARS B. C.
(Color)
Owing to limited Engage- m nts advance Bookings for Balcony, Reserve and 1st Class are available.

0 0 0

அக்காலத்திலே ஊரில் ஏதாவது வழக்கு ஏற்பட்டால், கோவிலுக்குச்சென்று அங்குள்ள பெரியோர்கள் மூலம் மரியாதையாக அதைத் தீர்த்துக்கொள்வதே தமிழ்மரபு. வீண் பணச்செலவோ, காலதாமதமோ கிடையாது. ஆனுல் இக்காலத்தில் அதையெல்லாம் மறந்துவிட்டோம். கோவிலில் ஏற்படும் சிறிய தகராறுகளையும் சில வழக்கறிஞர்கள் பெரிதாக்கிவிட்டுவளர்ப்பதுடன், வேறு சமயத்தைச் சேர்ந்த நீதிபதியாயினும் அவர்களிடம் சென்று நீதிபெற முனைகிறுர்களாம்! பணம் ஏராளமாக வீணுவதுடன், சைவ சமூகத்துக்கே இது பெரிய இழுக்கல்லவா?

ஒரு சைவக்கோயில் வழக்கு ஒரு பறங்கி நீதிபதியிடம் விசாரணைக்குச் சென்றதாம். 'ருத்திரா பிஷேகம்' என்பது என்னவென்று கோர்ட்டாருக்குத் தெரியவில்லை. அவர் விசாரித்ததும், அது "பேபி பாத் மைலாட்! (குழந்தை குளிப்பாட்டு பிரபுவே) என்று பதிலளித்தாராம்! வழக்கறிஞர்!

"அப்படியாயின், கோவில் டிரஸ்டியே ஏன் அதைச் செய்துவிடப்படாது?" என்று நீதிபதி திருப்பிக் கேட்டதாக அறிய வந்தேன். எப்படி இருக்கிறது நிலைமை!

ஊர் வழக்குகளைத் தீர்த்த நம் ஆலயங்கள் மீண்டும் எப்போது பயன்படப் போகிறதோ? அது தவக்கமாயினும் கோவில் வழக்குகளையாவது, கோவிலுக்குள்ளாகவே, தெய்வத்திடம் பூப்போட்டுப் பார்த்து தீர்த்துக்கொள்ள முடியாதா? மற்ற வழிபடு ஸ்தலங்களைப் பற்றிய தகராறுகள் அவர்களுக்குள்ளாகவே தீர்க்கப்படும் பொழுது, ஏன் இந்துஆலய வழக்குகளையும் அப்படியே செய்யப்படாது?

0 0 0

ஆண்களைவிட பெண்களுக்கே சைவசமயத்தில் சிறப்பான இடமளித்திருப்பதாயும் நவராத்திரி 9 இரவுகள் சக்தியின் விழாவாகக் கொண்டாடுகையில், சிவராத்திரி என்ற ஒரே ஒரு இரவுதான் சிவபெருமானுக்கு இருப்பதாயும் காலியைச் சேர்ந்த வித்வான் வசந்தா வைத்தியநாதன் அவர்கள், நயினை அம்பாள் கோயிலில் நடந்த சிவராத்திரி விழாவில் பேசுகையில் நகைச்சுவையுடன் குறிப்பிட்டார். அவர் பேச்சு ஆணித்தரம். இனிய

(1-ம் கலம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

(8-ம் கலத்தொடர்ச்சி)

குரல். "மாதொருபாகன்" என்ற விஷயம் பற்றி ஒரு மணிநேரம் பேசி பலரையும் மெய்மறக்கச்செய்து பாராட்டுகள் பெற்றுர். பெண்குலத்துக்குப்பெருமையளிக்கும் அவரை யாழ்ப்பாண சமயக்கூட்டங்களுக்கும் பேச அழைக்கலாம்.

0 0 0

அம்பாள் கோயிலில் சிவராத்திரி எப்படி கொண்டாடப்போகிறுர்களோ என்று நினைத்தேன். ஒரு கும்பத்தில் சிவபெருமானை மந்திரங்கள் மூலம் 'ஆவாகனம்' செய்து, அலங்கரித்து வைத்து கோயிலுக்கு வந்தவர்களனைவரிடமும் வில்வமும் தீர்த்தமும் குருக்கள் கொடுத்து, ஒவ்வொருவரும் நேரே அக்கும்பத்துக்கு அர்ச்சனைகளை செய்தது புதுமையாகவும் மிக முற்போக்காகவுமிருந்தது எல்லாருக்கும் மிக மகிழ்ச்சி!

கோப்பாய் பெண்கள் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் ஆசிரியை சந்தன நங்கை அம்மையின் தலைமையில் பக்திப்பாடல்கள் பாடி பலர் மனதையும் லயிக்கவைத்தனர். வீண் சந்தடிகள்இன்றி, பக்தியை வளர்க்கும்படியாக இவ் விழாவை நடத்தச் சிறந்த முறையில் ஒழுங்கு செய்திருந்தது மேலான முன்மாதிரியாகும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org